989

ஸ்ரீ பர்வத வர்த்தனி

989
1-57

ஆசிரியர்: V. M. நடேச நாட்டார்

மலர் 1	துன்முகி மாசித் திங்கள் பிப்ரவரி 1957	இதழ் 6

பொருளடக்கம் பக்கம்

1. கல்வியின் வெற்றி ... 163
2. சங்கத்தின் அவலநிலை ... 166
3. நீதிமந்திரிக்கு விண்ணப்பம் ... 169
4. சங்கச் செய்திகள் ... 169
5. அவசரக் கமிட்டி கூட்டம் ... 170
6. தாய் உள்ளம் ... 171
7. நிலையும் நினைப்பும் ... 173
8. மீனவர் ஜீவாதாரத்தின் திருத்தம் ... 176
9. யார் பெற்ற செல்வம் ... 180
10. வைத்தியம் ... 185
11. சம்பாஷணை ... 187
12. திருக்குறள் ... 188
13. அடிமை வாழ்வு ... 190
14. இன்ப வாழ்க்கை ... 194

8 FEB 1957
MADRAS

சென்னை மாகாண
...ராஜகுல சங்கம்
...வெளியீடு

5L
ஹா211, N156SP
N57·1·6.
187249

எல்லாவிதமான கைத்தறி ஜவுளிகளும்,

மில் ஜவுளிகளும், பல ரகங்களிலும்

விலை நயமாகக் கிடைக்கு மிடம்:-

V. K. வேதகிரி நாட்டார் &

V. J முனிரத்தின நாட்டார்.

மில் மேட் & கைத்தறி ஜவுளி வியாபாரம்

விரிஞ்சிபுரம், (N. A. DT.)

ஜெயலக்ஷிமி ஸ்டோர்ஸ்

காட்டுமன்னார்கோயில், (S. A. Dist)

எங்களிடத்தில் எல்லாவிதமான பெங்களூர், பனாரஸ், காஞ்சீபுரம், சேலம் பட்டு, நூல், ஜரிகை புடவைகளும் வேஷ்டிகளும், பலரக துப்பட்டாக்களும் வாயல்களும் விலை சரசமாகவும் உத்திரவாதத்துடனும் கிடைக்கும்.

V. P. சிவஞானம்
உரிமையாளர்.

உ
பராசக்தி துணை
" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் அம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு"

பர்வதவர்த்தனி

"எல்லாரு மின்புற் றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே".

மலர் 1	துன்முகி மாசித் திங்கள் பிப்ரவரி 1957	இதழ் 6

கல்வியின் வெற்றி

நம் பருவத ராஜகுல சங்கம் ஆரம்பித்து 26 வருடங்களாகி யும் இப்பொழுது யாம் அடைந்துள்ள மகிழ்ச்சி எக்காலத்தும் இல்லை. சங்கம் தொடங்கிய காலத்து இருந்த மகிழ்ச்சியினும் பன் மடங்கு மகிழ்ச்சியுறுகின்றோம் என்று சொல்வது மிகையாகாது. இதன் காரணம் நீங்கள் யாவரும் அறிந்ததொன்று.

'கேடில் விழுச் செல்வம்' கல்வியாதலால் அதனை அடைவதற் காகப் பணமின்மையால் நம்மவர் பட்டபாடு சொல்லுந் தரமன்று. சங்கம் ஆரம்பித்த நாள் தொடங்கி இந்நாள் வரையில் அரசாங்கத் தாரை இலவசமாகக் கல்வி தரவேண்டும் என்று விண்ணப்பித்துக் கொள்ளாத நாளே இல்லை. மத்திய அரசியலார் ஏற்படுத்திய பிற்போக்குக் கமிஷன் சென்னைக்கும் மற்ற நகரங்களுக்கும் வந்த காலத்திலும் நம்மவர்கள் ஆங்காங்குக் குழுவாகச் சென்று கல்வி யில் பிற்போக்காகவுள்ள நம்மவர்களின் நிலையை அவர்கள் புரிந்து கொள்ளும் முறையில் நன்றாக எடுத்துச் சொன்னார்கள்.

வெள்ளிவிழா நடந்தபோதும், நடந்த பின்னரும் சென்னை ராஜ்ய முதல் அமைச்சர் கனம். K. காமராஜர் அவர்களையும், கல்வி அமைச்சர் கனம். C. சுப்ரமணியம் B.A.;B.L.; அவர்களையும், விவசாய மந்திரி கனம். M. பக்தவத்சலம் B.A.;B.L.; அவர்களையும் பேட்டிகண்டு நம்மவர்களின் கல்வி நிலையையும் செல்வநிலையையும் விளக்கிச் சொல்லப்பட்டன. அவர்களும் மனமுவந்து ஆவன செய்வதாக வாக்குறுதி அளித்தார்கள்.

எல்லாம் வல்ல இறைவன் திருவருளாலும், சமூகப் பெரியார் களின் சலியா உழைப்பினாலும், அதிகாரிகளின் கிருபையாலும், அரசியலாரின் பெருங்கருணையினாலும் 5-2-1957 எல்லாத் தினசரி களிலும் கீழ்க்கண்ட அரசாங்க உத்தரவு வரப்பெற்றுள்ளது.

"ஷெட்யூல்ட் வகுப்பினருக்கு அனுமதிக்கப்படும் கல்விச் சலுகைகளை ராஜ்யத்திலுள்ள சில பிற்பட்ட வகுப்பினருக்கும் விஸ்தரிக்க சர்க்கார் முடிவுசெய்துள்ளனர். சில வகுப்புக்களை "மிகவும் பிற்பட்டவை" எனக் குறிப்பிட்டு, பிற்பட்ட வகுப்புகள் ஜாபிதாவிலுள்ள இதர வகுப்புகளுக்கு மேல் இவைகளுக்குக் கல்வி போன்ற சலுகைகள் அளிக்கலாம் என்று பிற்பட்ட வகுப்புகள் கமிஷன் யோசனை கூறியதற்கிணங்க இந்த முடிவு செய்யப்பட்டுள்ளது. பிற்பட்ட வகுப்புகளில் சில ஷெட்யூல்ட் வகுப்பினரைப் போல அவ்வளவு பிற்பட்ட நிலைமையில் உள்ளதாக சர்க்காரும் முடிவுக்கு வந்தது. இவர்கள் தீண்டாதார் என்ற இனத்தின்கீழ் வராததாலேயே ஷெட்யூல்ட் வகுப்பினருடன் சேர்க்க முடியாதிருக்கிறது. ஹரிஜன க்ஷேமநல டைரக்டர் சிபார்சின் பேரில் கீழ்க்கண்ட பிற்பட்ட வகுப்புகளை மிகவும் பிற்பட்டவையென சர்க்கார் அறிவித்துள்ளனர். இவ்வகுப்பினருக்கு இப்போதைக்கு ஷெட்யூல்ட் வகுப்பினருக்குள்ள கல்விச் சலுகைகள் 1957—58-ம் வருஷத்திலிருந்து கிடைக்கும்." இவைகளில் பருவதராஜகுலமும் ஒன்று.

இம்மரபினர்களின் உண்மை நிலையை உள்ளவாறு உணர்ந்து இவ்வளவு சீக்கிரமாக இவ்வுத்தரவைப் பிறப்பித்த அரசியலார்க்கு இச்சமூக மக்களின் சார்பாக நன்றி மிகுந்த வணக்கத்தையும் வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்ளுகின்றனம். இந்நன்றியை என்றும் மறவோம்.

நிற்க, ஹரிஜனங்களுக்குத் தரப்படும் கல்விச் சலுகை மட்டும் எங்களுக்கு உண்டு என்பதில் சில குறைகள் இருக்கக் காண்கின்றோம். தற்போது இம்மரபில் அதிகமாகப் படித்த வாலிபர்கள் இல்லை. ஒன்றிரண்டு இடங்களில் படித்தவர்கள்கூட வேலை இல்லாமல் திண்டாடித்தவிக்கின்றார்கள். உத்தியோகத்திற்காகப் படிக்கக் கூடாது; அறிவின் வளர்ச்சிக்கும், தேச சேவைக்கும், தொழில் அபிவிருத்திக்கும் படிக்கவேண்டும் என்று சொல்லும் பொதுச் சொற்களெல்லாம் இச்சமூகத்தினிடத்துப் பொருந்தாது. மிகவும் ஏழை சமூகம். படிக்கும்போதே வயிற்றுக்கில்லாமல் பட்டினிகிடந்து படிக்கும் நிலையில் படித்து முடிந்தபின் அதற்கேற்ற உத்தியோகத்தில் அமர்ந்து வாழ்க்கைப் போராட்டத்தை நடத்தத் தயாராக இருக்கிறார்களேயொழிய மற்றவைகளில் மனம்செல்வதில்லை. ஆனால், இந்தக்காலத்தில் பணக்காரர்களுக்கும், அரசியலில் செல்வாக்குடையவர்களுக்கும், பெரிய அதிகாரிகளின் உறவினர்களுக்கும், இன்னும் சொல்லப்போனால் அதிகாரிகள் எந்த வகுப்பாரோ அந்த வகுப்பினர்களுக்குமே உத்தியோகம் தடையின்றிக் கிடைக்கிறது.

இச்சமூகத்தினர்கள் உத்தியோகம் பெறுமைக்குக் காரணம் பெரிய அதிகாரிகளாகச் சொந்தக்காரர்களோ, சமூகத்தவரோ இல்லாதது, பணமில்லாதது, அரசியல் செல்வாக்கு இல்லாதது முதலியவைகளே என்பதை நிச்சயமாகச் சொல்லுகின்றோம். ஆகையால், அரசியலார்

18749

கருணைகூர்ந்து ஹரிஜனங்களைவிட மிகவும் பிற்போக்கான நிலையிலுள்ள இவ்வினத்தவர்களுக்கு ஹரிஜனங்களைப்போன்று உத்தியோக விஷயத்திலும் சலுகை காட்டினால்தான் ஓரளவு இச்சமூக மக்கள் படிப்பதும், பிழைப்பதும் முடியுமென்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

மீன் இலாக்காவின் நேர்மை

மேலும் மீன் இலாக்கா ஒன்று மீனவர் முன்னேற்றத்திற்கும் மீன் அபிவிருத்திக்கும் பாடுபட்டு வருகின்றது. இந்த இலாக்காவில் முழுவதும் உயர்ந்த உத்தியோகத்திலாவது அல்லது குமாஸ்தா வேலையிலாவது இம்மரபினர்கள் இல்லை. இங்கு என்ன நடைபெறுகிறது என்பதே எங்களுக்குத் தெரியாத நிலையில் அவ்விலாக்கா இருக்கிறது. உண்மையில் அந்த இலாக்காவில் 50 சதவீதமாவது இம்மரபினர்களையே வேலைக்கு வைத்துக்கொள்ளவேண்டுமென்ற ஒரு விதியாவது இருந்தால்தான் இம்மரபுப் பிள்ளைகள் முன்னேற வழி இருக்கும். அன்றியும், மீன் அபிவிருத்தியும் சிறக்கும் என்பதில் ஐயமில்லை. 'குலவித்தை கல்லாமல் பாகம் படும்' என்பது எவ்வளவு சிறந்த உண்மை என்பதை யாவரும் அறிவர். மீன் இலாக்காவினால் பயனடையவேண்டும்; மீன் பிடிப்பதால் பயனடையவேண்டும் என்று கூப்பாடு போட்டுக்கொண்டிருக்கும் இதே நேரத்தில், B.S.O. 211-க்குத் திருத்தம் வேறு வந்திருக்கிறது. இதற்கென்ன செய்வதென்றே தெரியவில்லை. கனம். காமராஜர் அவர்களுக்கும் இதைக்குறித்து சேலம் பூலாம்பட்டியில் விண்ணப்பித்துள்ளோம். இதைக்குறித்து கனம். அடிஷனல் டைரக்டர் அவர்களைப் பேட்டிகண்டபோது "மீன் இலாக்காவை நீங்கள் நம்புங்கள். அவர்கள் உங்களைக் காப்பாற்றாமல் விடமாட்டார்கள். நீங்கள் கஷ்டப்படவோ, நஷ்டப்படவோ நாங்கள் பார்த்துக் கொண்டு இருக்கமாட்டோம்" எனத் தேற்றுகிறார். மீன் இலாக்காவை இதுவரைநம்பித்தானே சமூகத்தில் அடிமைகளாய், மற்றவரின் கைப்பொம்மையாய் வாழ்கிறோம் என்று அவர்களுக்கு எடுத்துச் சொன்னதெல்லாம் விழலுக்கிறைத்த நீராய்விட்டன. சுதந்திர இந்தியாவிலும் நாங்கள் அடிமைப்பட்டு வாழஆண்டவன் விதித்துவிட்டான் போலும்! என்னவோ? காலம் எங்களை முன்னுக்குக் கொண்டுவரும் என்று எங்களை நாங்களே தேற்றிக் கொள்ளும் முறையில் அவல நிலையில் வாழ்கின்றோம். இதன்றியும் மறுபடியும் Memo No. 11485/E-1/57-1 நெ. கொண்ட மறு திருத்தமும் 2-2-57-ல் வெளிவந்துள்ளன. அதில் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் உள்நாட்டு நீர்நிலைகளைப் பல ஆண்டுகளாக மீனவர்களுக்கே 5வருட சராசரிக்குக் குத்தகை விட்டுவந்தவைகளை சொசைட்டிகளுக்கோ அல்லது பஞ்சாயததுக்கோ விடக்கூடாது பொது ஏலம்தான் விடவேண்டியதென புதிய ஆர்டர் வந்துள்ளது. இதனால் உள்நாட்டு மீனவர்கள் உயிருடன் வாழவேண்டிய அவசியமில்லை வேறு தொழிலுக்கே போய்விடுங்கள் என்று சொல்வதைப்போல், இது நமது காருண்ய காங்கிரஸ் கவர்ன்மெண்டார்

பிறப்பித்த உத்திரவாகும். ஆதலால், இது இவ்வேழை மக்களை மிகவும் பாதிக்கப்பட்டதொன்றாகும் என்று சொல்வது மிகையாகாது. உடனே B.S.O. 211 திருத்தங்களை ரத்துசெய்து பழைய படியே இம்மீனவர்களைச் சுதந்தரமாக வாழச் செய்தல்வேண்டும்.

ஆகையால் ஹரிஜனங்களுக்குத் தரப்படும் கல்விச் சலுகையைத் தந்த அரசியலார், உத்தியோகத்திலும் அவர்களுக்குள்ள சலுகைகளை அளித்து, மீன் இலாக்காவில் ஐம்பது சதவீதம் உத்தியோகத்தைக் கொடுத்து, B.S.O. 211-க்கு வந்துள்ள திருத்தத்தை நீக்கி எங்கள் சமூகத்தவரை ஆதரிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகின்றனம். [ஆசிரியர்.]

சென்னை ராஜ்ய பர்வத ராஜகுல சங்கம்

சங்கத்தின் அவலநிலை

நமது சங்கம் ஆரம்பித்து 26 ஆண்டுகள் முடிந்து, 27-வது ஆண்டிலும் பல மாதங்கள் ஆகின்றன. இதுவரையில் சங்கத்துக்கென்று எந்தவிதமான மூலதனமுமில்லாமல் நடந்து கொண்டுதான் வருகிறது. சமூக மக்களின் ஒத்துழைப்பு சங்கத்திற்கு இருக்குமானல் இந்நிலையில் இச்சங்கம் இருக்காது. ஆங்காங்கு ஒருவர் இருவர் இருந்துகொண்டு சங்கத்தை எத்துணை காலம் தாங்கிப் பிடித்துக்கொண்டு இருக்கமுடியும்? 'பல கை தட்டினல்தான் ஓசை எழும்பும்' பணம் இல்லாவிட்டால் இந்தக் காலத்தில் எந்தக் காரியம்தான் நடைபெறும்? எத்துணைமுறை வற்புறுத்தி எழுதினலும் படித்தும் கேட்டும் விட்டுத் தம்படிகூட கொடுக்க மனமில்லாமல் இருந்தால் எது எப்படி நடக்கும் என்பதையாவது உணரவேண்டும். அவர்களுக்குச் சிந்திக்கும் ஆற்றல்தான் இல்லையோ? கொடுக்கும் மனம்தான் இல்லையோ? ஈசனே அறிவார்!

சங்கத்தினல் உண்டாகும் நன்மைகளை எல்லாம் ஆடாமல் அசையாமல் பெற்றுக்கொண்டு இதுவரை ஒரு செல்லாக் காசு கூடக் கொடாத மகானுபாவர்கள் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். வெளியிலிருந்துபோய் நேரில் சென்று வெள்ளிவிழாவுக்கென்றும் மாநாட்டுக்கென்றும் நன்கொடை கேட்டால் எங்களுக்கே சங்கம் கொடுக்கவேண்டும்; இன்னின்ன காரியங்களைச் செய்யவேண்டும் என்று உத்தரவு போடுகிற தர்மாத்மாக்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். முதலிலிருந்தே சங்கத்தில் சேராமலும் அதில் கலந்துகொள்ளாமலும் இருக்கும் அன்பர்கள் பலர் இருக்கத்தான் செய்கிறார்கள். காட்டுமன்னார்குடி ஊண் விடுதியிலிருந்து படித்து உத்தியோகம் செய்தும், படித்துப் பட்டம் பெற்றும் நல்ல நிலையில் இருப்பவர்கள்கூட சங்கத்திற்கு எந்த விதத்திலும் உதவிசெய்யாமல் இருக்கத்தான் செய்கிறார்கள். சங்கத்தின் செயல்களுக்கு நேர்மாறான காரியங்களைச் செய்யத்

தூண்டும் பெரியார்களும் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். தாங்களே படித்துப் பட்டம் பெற்று நல்லநிலையில் உள்ளவர்களும் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். பணக்காரர்களாய் எவ்வித கவலையுமின்றி சமூக மக்களை ஆட்டிவைத்துக்கொண்டு சுகமே திரியும் சுயநலவாதிகளும் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்களெல்லாம் பரம ஏழைகளாய் இருந்தால் யாரும் கேட்பாரில்லை. நம்மினத்தவரில் மற்றவர்களைவிட இவர்கள் பணக்காரர்களாய் இருப்பதால்தான் சொல்லவேண்டியதாய் உள்ளது.

இவர்களுக்கு இடையில் சங்கத்திற்கென்று கேட்கும்போதெல்லாம் கொடுக்கக்கூடியவர்களும், கூப்பிடும்போதெல்லாம் வரக்கூடியவர்களும், பணம் இல்லாவிட்டாலும் தேக உழைப்பைத் தரும் வாலிபர்களும், அறிவின் பயனைத்தரும் அறிவாளிகளும், குடும்பத்தைக்கூடக் கவனிக்காமல் அல்லும் பகலும் சங்கத்துக்கே வேலைசெய்பவர்களும், அசௌக்கியமுள்ள காலத்தும் சங்கத்தின் எண்ணமே பெரும் எண்ணமாக உடையவர்களும், ஒன்றைச் செய்தாலும் நூறாக்கிப் பிரசாரம் செய்பவர்களும், கூட்டத்தில் திட்டம் தீட்டிவிட்டு வீட்டில் சுகமே உறங்குபவர்களும் பலர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

சங்கத்திற்கு வருட சந்தா சாதாரண அங்கத்தினர்களுக்கு நான்கு அணா. நிர்வாகசபை அங்கத்தினர்களுக்கு ஒரு ரூபாய். ஒவ்வொரு கிளைச்சங்கமும் வருடம் ஒன்றுக்குச் செலுத்த வேண்டிய ரூபாய் ஐந்து. இதைக்கூடச் செலுத்தமுடியவில்லை என்றால் உண்மையில் பணம் இல்லாக் குறையா? மனம் இல்லாப் பண்பா? நீங்களே யோசித்துப் பாருங்கள். இதைக்கூடச் செய்யமுடியாத ஒரு சமூகம் பேசும் வார்த்தைகளோ அளவிட்டுக் கூற முடியாது. இந்நிலையில் சங்கம் வேலை செய்துகொண்டும் வேலை செய்யாமலும் மிகவும் பொறுமையாய் 25 வருடகாலம் காப்பாற்றித் தந்த இடைப்பாடி அன்பர்களை வாழ்த்துவதா? அல்லது வணங்குவதா? என்றே தோன்றவில்லை. அவர்கள் பெருங்குணம் நன்கு ஓங்குக. அவர்களைப்பற்றி என்றும் மறக்கமுடியாது.

சில ஊர்களில் தங்களுக்கு ஆகவேண்டிய காரியத்துக்கு மட்டும் இங்கே வருகின்றார்கள். வந்தவர்கள் முகம் கோணாமல் ஏதோ இயன்றமட்டும் செய்து தரவேண்டியதாய் இருக்கிறது. அத்தகையவர்கள் கூடச் சங்கத்திற்கு ஒன்றும் தருவதில்லை. சங்கத்துக்குத் தபால் வருவதோ ஒரு குமாஸ்தா உத்தியோகம் செய்துவிடலாம் போலிருக்கிறது. சென்ற மே மாதத்திலிருந்து இதுவரை தபால் செலவோ நூறு ரூபாய்க்கு அதிகமாகி இருக்கிறதென்றால் அதிலிருந்து தெரிந்துகொள்ளுங்கள். அதிகாரிகளிடமோ அரசாங்கத்திடமோ நமது குறைகளைச் சொல்வதற்கு ஏதாவது தகவல்கள் கேட்டால் யாரும் ஒன்றும் அனுப்புவதே கிடையாது. இவ்வளவு மோசமாகத் தெரிந்தவர்கள்கூட நடந்துகொண்டால் இங்கே இருந்து என்னதான் வேலை செய்வது என்றுகூடத் தெரிய

வில்லை. என்ன இருந்தாலும், எப்படி இருந்தாலும் இம்மாதிரியே போய்க்கொண்டிருக்குமானால் அதன் முடிவு அதிக நாட்களுக்கு மேல் இருக்காது என்பதே எமது தாழ்மையான அபிப்பிராயமாகும்.

இதன் நிலை இவ்வாறிருக்க பருவதவர்த்தனி எந்த நிலைமையில் இருக்கிறது என்பதைப் பார்ப்போம். 6 மாதம் முடிந்துவிட்டது. 70 நபர்கள்தான் சந்தா அனுப்பி இருக்கிறார்கள். இதுவரை வந்த ரூ. 200-0-0 க் கொண்டு எப்படி நடத்துவது? பருவதவர்த்தனியில் படங்கள் இல்லை; நல்ல கதைகள் இல்லை; சரித்திர வரலாறுகள் இல்லை; சினிமா விமரிசனங்கள் இல்லை; விளம்பரங்கள் இல்லை; இலாபம் இல்லை; முதலும் இல்லை; நஷ்டமும் இல்லை; இன்னமும் பல இல்லை—இல்லை—இல்லை.

எப்படி இருக்கும் என்றுதான் கேட்கிறேன்? 600 சந்தாதாரர்கள் இருந்தால் முதல் மாதமே ரூ. 1800—வந்தால் இலாபமாயிருந்தாலும் நஷ்டமாயிருந்தாலும் செலவுசெய்து நல்ல முறையில் நடத்த மனமிருக்கும். இல்லாவிட்டால் யாருக்குத்தான் செலவு செய்ய மனம்வரும்? அத்தகையவர்கள் செலவுசெய்து பார்த்தால் அந்தக் கஷ்டம் தெரியும்? வெறுங்கையால் முழம் போடுவது என்று சொல்லுவார்கள். முடியுமா? முன்னர் ரூ. 2,000-க்கு மேல் நஷ்டம். இப்போது எப்படி முடியுமோ? ஈசனே அறிவார்! இந்நிலையில் இது இன்னும் எத்தனை மாதங்களுக்கு ஓடிக்கொண்டிருக்குமோ? யார் அறிவார்?

மற்ற சமூகங்களில் வெளிவரும் சஞ்சிகைகளையும் காண்கிறோம். அவைகளைப் பார்க்கும்போதெல்லாம் பெரும்பாலும் பொறாமை ஏற்படத்தான் செய்கிறது? நமக்கு ஏதாவது விசேஷ மலர் உண்டா? பொங்கல் மலர் உண்டா? இருக்கும் மலரே வாடாமல் வதங்காமல் இருந்தால் போதும்என்ற நிலையில் இருக்க வேண்டியதாய் இருக்கிறது. 'பணம் பாதாளம் வரையில் பாயும்' என்ற பழமொழி வீணல்ல.

சங்கத்துக்கும் பர்வதவர்த்தனிக்கும் யாராவது லக்ஷாதிபதிகள் முதல் கொடுத்திருக்கிறார்களா? பிள்ளையில்லாதவர்கள் சொத்து ஏதாவது எழுதி வைத்திருக்கிறார்களா? அத்தகைய உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் இருந்தாலும் இருக்குமிடம் தெரியாமல்தான் இருக்கிறார்கள்.

பெரியோர்களே! குலாபிமானிகளே! அன்பர்களே! வாலிபர்களே! இதுவரையில் ஏதோ தொடங்கி சுருக்கமாக ஒருசிலர் மனம் புண்படும்படி ஏதோ எழுதிவிட்டதற்கு மன்னியுங்கள். உள்ளதை உள்ளவாறே சொல்லவேண்டியிருக்கிறபடியால் சொல்லிவிட்டேன். உங்களால் இதை நிவர்த்திக்க முடியுமானால் நிவர்த்தி செய்ய முற்படுங்கள். இல்லையேல் எல்லாவற்றையும் போல இதையும் படித்துவிட்டுச் சுகமே தூங்குங்கள். நாங்களும் இன்னும் சில காலம் கழித்து நன்றாய்த் தூங்குகின்றோம். [உண்மை விளம்பி.]

சென்னை ராஜ்ய நீதி அமைச்சர்க்கு 14-2-1957-ல் இடைப்பாடியில் சங்கத் துணைத்தலைவர் S. K. G. நாராயணபக்தர் விண்ணப்பித்துக்கொண்ட விண்ணப்பம்.

அன்புள்ள ஐயா!

சென்னை ராஜ்யத்தில் எங்கள் சமூகம் கல்வி, பொருளாதாரம், தொழில் இவைகளில் மிகவும் பிற்போக்கிலுள்ளதாலும், சட்டசபை, மேல்சபை, ஸ்தலஸ்தாபனங்கள் இவைகளில் எங்கள் சமூகத்தவர் இதுவரையில் போட்டியிட்டு வராததாலும், தாழ்த்தப்பட்ட, அல்லது ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களில் எங்கள் சமூகத்திற்கென தொழில் அடிப்படையில் ஒரு ஸ்தானம் அளிக்க வேண்டுமென சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறோம்.

கல்வி நிலையங்களில் சமூக மாணவர்களுக்குக் குறைந்தபக்ஷ மார்க்கு வாங்கினுல்கூட பரீக்ஷைகளில் தேறலாம் என்ற அடிப்படையிலும் இச் சமூகத்திற்கு விசேஷ சலுகை காண்பித்து சமூக நிலையை சர்க்கார் உயர்த்தவேண்டுமென்றும், இலவச ஸ்காலர்சீப் வழங்கவேண்டுமென்றும் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறோம்.

ஹரிஜன க்ஷேமநல கமிட்டியிலும் மீன் இலாக்காவிலும் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டுவதுடன் பிற்பட்ட வகுப்பு, அல்லது தாழ்த்தப்பட்டவகுப்பு அல்லது தொழில் அடிப்படையில் எங்கள் பர்வதராஜகுல சமூகத்தினர்களுக்கு (உள்நாட்டு மீன் பிடிப்பவர்) சட்டமன்றத்திலும், கனம். கவர்னர் அவர்கள் நியமனம் செய்யும் மேல்சபையிலும் (M.L.C.) மற்ற ஸ்தலஸ்தாபனங்கள் போன்றவைகளிலும் போதியபிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

சங்கச் செய்திகள்

2-3-57-ல் திரு. இராமசாமி நாட்டார் அவர்கள் தலைமையில் தென்னுற்காடு மாவட்ட பர்வதராஜகுல இளைஞர் சங்கச் செயற்குழு நடைபெற்றது. வரவு செலவு கணக்கு பரிசீலனை செய்து அங்கீகரிக்கப்பட்டது.

(அ) பாக்கியை வசூலிக்க காரியதரிசிக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

(ஆ) இருப்பை பொதுச்செயலாளர் திரு. குப்புசாமியின் பெயரில் S.B a/c யில் போடுவதென்றும், பாங்கு புத்தகங்கள் தலைவரிடம் இருப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

(இ) அங்கத்தினர்கள் வருட சந்தா 0-8-0 அணு (எட்டணுவாகக் குறைத்து வசூலிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

(ஈ) ஹாஸ்டலுடன் நடுத்தரப்பள்ளி ஒன்று நிறுவவேண்டுமென்றும், அதற்காகப் பொருள் திரட்ட சங்கீதக்கச்சேரிகளும், நாடகங்களும் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

உடையார்குடி மீன்பிடிப்போர் கூட்டுறவுச்சங்கம் லிமிடெட் No 1117. ஷை சொசைட்டிக்கு பெரியகுளம், பொட்டைகுளம், ஆயிகுளம், சுண்ணும்புக்குளம் ஆக இந்த நான்கு குளங்களையும் 1957—58 வருஷத்திற்கு 5 வருட தவணையில் கொடுக்கும்படி மீன் இலாக்காவைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சென்னை ராஜ்ய பருவத ராஜகுல சங்கம்

அவசரக் கமிட்டிக் கூட்டம்

24—2—57 ஞாயிறு காலை 9 மணிக்கு உயர்திரு. V.M. நடேச நாட்டார் அவர்கள் தலைமையில் ஷை கூட்டம் நடைபெற்றது. 17 சொசைட்டிகளிலிருந்தும் மற்றும் வெளியிலிருந்தும் நூற்றுக் கணக்கான அங்கத்தினர்கள் வந்திருந்தனர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

தீர்மானம் 1.

ஷெட்யூல்ட் வகுப்பினர்களுக்குள்ள கல்விச் சலுகைகளை இச்சமூகத்தவர்களும் பெறலாம் என உத்தரவு பிறப்பித்த அரசாங்கத்தையும் சிறப்பாக கனம். K. காமராஜர் அவர்களையும் இக்கமிட்டி பாராட்டுவதோடு நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறது.

2. இச்சமூக மக்கள் தொழில் துறையில் பிற சமூகத்தவருடன் ஏலத்தில் போட்டியிட முடியாத நிலைமையில் இருப்பதால், 1—10—56-ல் அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்ட G.O. No. 3696/56 திருத்தத்தையும், 2—2—57-ல் பிறப்பித்துள்ள Memo No. 14485/E-1/57-1 உத்தரவையும் நீக்கி, முன்பிருந்தபடியே B.S.O. 211, G.O. No. 200-ம் நிரந்தரமாக இருக்கும்படி அரசியலாரை இக்கமிட்டி கேட்டுக்கொள்ளுகிறது.

3. சென்னை ராஜ்ய பருவதராஜகுல சங்கத்தலைவர் அவர்கள் அரசியலாரிடம் 12-2-57-ல் விண்ணப்பித்துக்கொண்ட மனுவை பரிசிலனைசெய்து இவ்வேழைச் சமூகத்தைக் காப்பாற்றும் முறையில், சாதகமான பதிலை விரைவில் அனுப்பிவைக்கும்படி இக்கமிட்டி கேட்டுக்கொள்ளுகிறது.

4. மீன்பிடி தொழிலும், மீனவமக்களும் முன்னேறவும், தேசிய உணவுப் பெருக்கம் அதிகரிக்கவும் அரசாங்க அதிகாரிகளும் மீனவ சங்கப் பிரதிநிதிகளும் கொண்ட ஓர் கமிட்டியை ஏற்படுத்த வேண்டும் என அரசியலாரை இக்கமிட்டி கேட்டுக் கொள்ளுகிறது.

5. மீன் தொழில் சம்பந்தப்பட்ட புது உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டதும் அதன் நகல்களை சென்னைராஜ்ய பருவதராஜகுல சங்கத்திற்கு அனுப்பும்படி அரசியலாரையும், மீன் இலாக்காவையும் இக்கமிட்டி கேட்டுக்கொள்கிறது.

6. ஷெட்யூல்ட் வகுப்பினர்க்கு உள்ள கல்விச் சலுகைகளை இச்சமூகத்திற்கு அளித்த கனம். K. காமராஜர் அவர்களும், அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் அபேட்சகர்களும் வெற்றிபெறவேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ள இச்சமூக மக்களை இக்கமிட்டி கேட்டுக்கொள்ளுகிறது.

தாய் உள்ளம்

"தென் குமரன்"

ஐயோ! நான் ஏன் பிறந்தேன் பெண்ணாய்? வேதனைப் படுவதற்கா? சோதனைகள் பல அடைவதற்கா? என்னைப் பெண்ணாய்ப் படைத்து, ஒரு பெண்ணுக்குத் தாயாக்கி, என் இதயத்தில் தாய்மை உணர்ச்சிகளை நுழைத்து, அன்பின் வடிவமாய் இருந்த எனக்கு, ஆண்டவன் ஏன் பேசும் சக்தியைத் தந்தான்? எனக்கு வாய் படைத்த அந்த ஆதிபகவனை என் செய்ய?

எனக்குப் பிறந்தாள் ஒரே மகள். உயிரே போல் வளர்த்தேன் அவளை; சிங்காரச் சித்திர மாக்கினேன்; பேசும் சிலையாக்கினேன்; என் முதுமைக் காலத்தில் உறுதுணையாக இருப்பாள் என்ற எண்ணத்தால்! நேற்று என் வாய் செய்துவிட்ட தவறு அந்தச் சிலையை—எனக்கு இன்பம் தந்த அந்தக்கலையை—வேறொருவனுடன் அனுப்பிவைத்துவிட்டது!

நான் நேற்றுமுதல் வருந்தி வருந்தி மெலிகிறேன்! என் வீட்டு முற்றத்தில் தோழியர் ஆயம், மணல் கொண்டுவந்து பரப்பிப் பாவை விளையாட்டு விளையாடியதையும், நொச்சி வேலியையும் என் கண்கள் பார்க்கும் போதெல்லாம், கண்கள் குடங்களாகின்றன; இதயக் கேணியிலே வேதனை நீர் சுரக்கிறது! அவளால் வளர்க்கப்பட்ட கிளியே, அவள் பிரிவைத் தாளமாட்டாது, அவளை நினைத்து நினைத்து விளித்துக் கூவுகிறதே! நானோ அவளைப் பெற்றவள்; பாசத்தையெல்லாம் கொட்டி வளர்த்தவள்; என் உயிரையெல்லாம் அவள்மீதே வைத்திருந்தேன்; எனக்கு எப்படியிருக்கும்? என் இதயம் எப்படி வருந்தும்? என் தாய்மை எப்படி அழும்?

அந்த நாளை இப்போது நினைத்துவிட்டால், என் தாய் உள்ளத்தில் பெருகும் வேதனையை என்னென்பேன். என் இளமகள் குற்றமற்றவள்; தெளிந்த மனத்தினள்; கனிந்த உள்ளத்தினள். அந்த நல்ல உள்ளத்தைக் கலக்கிவிட்டேன்; குழப்பிச் சகதியாக்கிவிட்டேன்! பயத்திற்கு உள்ளாக்கிவிட்டேன் என் செல்வ மகளை!

அன்று, இந்த ஊர்ப்பெண்கள் எனக்குப் பிறந்த இளமகளைப் பற்றி ஏதேதோ சொன்னார்கள்! அவர்கள் தூற்றினார்கள்! அதனால் என் தாய்மை வெகுண்டது; தாயுள்ளம் சீறியது மகள் மீது ஊர் பழி சுமத்தியது கேட்டு! நான் என் செய்வேன்? நானும் பெண்தானே? தவறுகள் செய்யும் தாய்தானே? அதனால் நான், சிரித்த முகத்துடன் வந்த என் மகளைப்பார்த்து, 'நறிய நாறும் நின் கதுப்பு' என்றேன். முன்பு எல்லாம் வீசாத ஒரு வித மணத்தை உன் கூந்தல் இன்று பரப்புவது ஏன்? என்றேன்,

அதைக்கேட்டு என் உயிர்மகள், 'ஐயோ! என் தாய் அறிந்து கொண்டாளே, நான் என் காதலனுடன் கொண்ட உறவை. இனி அவள் முகத்தில் விழியேன். இனி என் தாய் முகத்தில் விழியேன்' என்று எண்ணியிருப்பாள்! அந்த எண்ணத்தோடு, தன் காதலனுடன் 'களவு'போய்விட்டாள்!

ஐயோ, நான் கொடியவளா! நான் ஒரு மொழி சொன்னேன் என் மகளிடம்; அதற்காகவா அவள், வீட்டை விட்டுப் போய் விடவேண்டும் என் இதயத்தைச் சுக்கு நூறுக்கிவிட்டு! என்னைத் தனிமை இருளில் தள்ளிவிட்டு இனிமையாகப் போய்விட்டாளே என் மகள்!

'ஒருமகள் உடையேன் மன்னே; அவளும்
செருமிகு பொய்ம்பின் கூர்வேல் காளையொடு
பெருமலை அருஞ்சுரம் நெருநல் சென்றனள்'

என்று பார்ப்பவர்களிடம் எல்லாம் சொல்லி வருத்தப்படுகிறேன். அவர்களோ 'பொறுமை உபதேசம்' செய்கிறார்கள். நான் பொறுமையாய் இருக்கவேண்டுமா? என்னால் எப்படி முடியும் பொறுமையாய் இருக்க? உணர்வு அற்ற சிலையாய் இருக்க?

......'அறிவுடையீரே
உள்ளின் உள்ளம் வேமே உண்கண்
மணிவாழ் பாவை நடைகற் றன்னஎன்
அணிஇயல் குறுமகள் ஆடிய
மணிஏர் நொச்சியும் தெற்றியும் கண்டே!'

என்று, அறிவுடைய உங்களிடம் கூறி வருத்தப்படுவதைத் தவிர வேறொன்றையும் அறியாதவளாய் இருக்கின்றேனே!

ஐயோ! அவளைப் பெற்ற நான் பித்தம் பிடித்தவள்போல் வாழ்வு வாழ்கின்றேன்! என் மகள் மனமோ கல்லாய் இருக்கிறது! என் வேதனையைக் கண்டு வருத்தப்படுபவர்கள்தாம் இருக்கிறார்கள்; கண்ணீர் வடிப்பவர்கள் யாருமே இல்லை; என்னோடு சேர்ந்து அழ யாருமே இல்லை! நான்மட்டும் தனிக்கட்டையாக வாழ்கிறேன்; நொந்த இதயத்தோடு சொந்தச் செல்வியை வெளியே துரத்திவிட்டு!

சந்தனத்திலிருந்து பிறக்கும் மணம், மரத்திற்குச் சொந்தமல்ல; ஒளி, நீலமணிக்குச் சொந்தம் அல்ல; இப்படித்தான் மகளும் தாய்க்குச் சொந்தமல்ல! யாழிலே பிறக்கும் இசை யாழுக்கு என் செய்யும்! இந்தத் 'தத்துவங்கள்' எனக்கு நன்றாகப் புரிகின்றன! ஆனால், என் பெற்ற வயிறு கேட்கவில்லையே...! அதில் பற்றி எரியும் பாசத்தின் வெம்மையைப் பொறுக்க முடியவில்லையே...!

என் மகளை எங்கெங்கோ தேடுகிறேன்; காணாமல் வாடுகிறேன்! இத்தனைக் காலமாக என்னால் வளர்க்கப்பட்டாள்;

பாசத்தோடு வளர்க்கப்பட்டாள்! துன்பத்தைத் தொலைத்து, அவள் வாழ்வில் இன்பத்தைக் கூட்ட நான் பட்டபாடு......! ஈதெல்லாம் மறந்துவிட்டு எப்படித்தான் போனாளோ புதியவனை நம்பி!

அன்றொருநாள்!

எங்கள் வீட்டில் செழுமையாக வளர்ந்திருந்தது வயலைக் கொடி. அந்த வயலைக்கொடியைக் கன்று ஈன்ற பசு தின்று விட்டது. அதைப்பார்த்துவிட்டாள் என் மகள். அவ்வளவு தான்; விளையாடுவதற்காகக் கையில் வைத்திருந்த பந்தை வீசி எறிந்துவிட்டாள்; விளையாட விரும்பிய பாவை விளையாட்டை மறந்துவிட்டாள்; தன்னுடைய அழகிய வயிற்றில் அடித்துக் கொண்டு வருந்தினாள், 'மான் அமர்ப்பு அன்ன மையல் நோக்க முடைய' என் குறுமகள்! நானும் செவிலித்தாயும் தேனோடு தீம்பால் கொண்டுசென்று, 'சாப்பிடு செல்வமே!' என்று பல முறை வேண்டியும் மறுத்துவிட்டாள் என் தங்கத் திருமகள். ஐயகோ! அப்படிப்பட்டவள் நேற்று, காளைநிகர் கட்டழகனின் பொய்ம்மையை உறுதுணையாகக் கொண்டு, நடத்தற்கரிய பாலை வழியே போனாள் என்று செப்புகிறார்கள்; கண்ணால் கண்ட வர்கள்!

அங்கு என் செல்வ மகள் எப்படி வருந்துகிறாளோ? இங்கே என் தாய் உள்ளம் வெந்து சாகிறது! அங்கே அவள் இன்பமாக வாழ்கிறாளோ என்னவோ? இங்கே என் தாய் உள்ளந் துயரத் தீயிலே வேகிறது! வந்தவனுடன் அங்கே அவள் வாழ்வு செய்கிறாள்; அவளை எண்ணி என் தாய்உள்ளம் விம்முகிறது. நேற்று வந்தவனின் அன்பை நம்பிச் சென்றாளே; பதினெட்டாண் டுகள் நான் காட்டிய நேசம், ஊட்டிய பாசம், தரத்தில் குறைந் ததா? குழந்தை உள்ளத்திற்குத் தாய் உள்ளம் ஒரு புரியாத புதிரா? செந்தமிழ் நாடே! இதற்குப் பதில் சொல்!

நிலையும் நினைப்பும்

இரா. நடராசன், மஞ்சை நகர்.

நம் நிலை என்பது நம் பர்வத ராஜகுலத்தவருடைய அகம், மனப்பண்பு, மன வளம், மனநிலை, நினைப்பு, நெஞ்சுக் குமுறல் பற்றியதாகத்தான் இருக்கும். நம் மக்களின் அகத்தை, மனத்தை, மன்தில் உதித்திடும் எண்ணங்களின் பிரதிபலிப்பைப் பற்றித்தான் நான் குறிப்பிடப் புகுகிறேன்.

இந்த நேரத்தில் ஒன்று கூறாமல் இருக்க முடியாது. மிடியினால் மடிபவன் தன் முற்காலச் செல்வச் செருக்கைச் சிந்திக்காம

லிருக்க மாட்டான். அதுபோன்று நாம் நம்முடை பழங்கால செழுமையை மனத்தில் எழுப்பாமல் இருக்க இயலாது. நினைப்பிற்கு எட்டாத நெடுங்கால சரித்திரத்தைப் பிரித்தால் புரியும் நம் நிலை என்னவென்று. நெய்தல் நிலத்திலே வாழ்ந்த பரதவ குலத்தினர் ரோமாபுரிக்கும், கிரேக்க நாட்டிற்கும் கலங்களைச் செலுத்தி வியாபாரம் செய்த வீரர்களல்லவா? அத்தகையோர் அன்று சுக்கான் பிடித்துக் கலத்தைச் செலுத்திய கரத்திலே கட்டு மரத்தைக் கொடுத்து, பாய்மரத்தை விரித்து, தூண்டில் முள்ளைக் கொண்டு மீன் பிடிக்கும் இழிவான நிலைக்குக் கொண்டுவரப் பட்டுள்ளனர். பாண்டியன் காலத்திலே மூச்சடக்கி மூழ்கி முத்துக் குளித்தவர்கள், இன்று சேற்றிலே வெறும் மீன்பிடிக்கும் செம்படவர்களாக்கப்பட்டுள்ளனர். கலத்தைச் செலுத்தி, அலையை அடக்கி, அயல்நாட்டில் வாணிகமாற்றியவர்கள் இன்று வலையைத் தோள்மேலே சுமக்க நேர்ந்தது ஏன் என்பது யாவருக்கும் வியப்பைத்தான் பயக்கிறது?

மூன்று பக்கமும் கடலாலும். ஆயிரக்கணக்கான மைல் நீளமுள்ள ஆறுகளாலும் சூழப்பட்ட நம் திராவிட நாட்டில் நாம் வல்லமையுடன் கலங்களைச் செலுத்திப் பாரில் புகழ் பெறலாமே! ஆனால், நாம் இன்றைய நிலையை நினைக்கும்போது இன்னும் சமுதாயத் துறையிலே அரசியலை அறியாதவராக, கல்வியிலே புலமை பெறாதவராக, நாகரீகத்தில் நல்ல நிலைமையை எட்டிப் பிடிக்காதவர்களாக, ஆற்றோரங்களில் அழிந்து கிடக்கின்றோம். சமுதாயம் என்று நோக்கும் போது நம்மைக் காட்டிலும், பட்டி தொட்டிகளிலே வாட்டமே உருவாய் அமைந்தவர்கள் இன்று எட்டி நடைபோடுகிறார்கள். ஆனால் நாம்? இன்னும் பார்க்கப்போனால் நம் மினத்தவரிலே பெரும்பாலானவர்கள் அரசியலின் அகராதியைக் கூட அறியாதவராய் அறியாமையிலே மூழ்கிக் கிடக்கின்றனர். தேர்தல் காலத்தில் கையூட்டுப்பெற்று ஓட்டுச்செய்யும் இழிவான நிலைமையை ஆக்கிக்கொண்டுவிட்டனர். இந்நிலையைத் தொலைக்க மன எழுச்சி கொண்ட நம் குழுவினர்; சில பல கட்சிகள் தங்கள் கட்சியினருக்கு உண்மையாக உழைப்பவர்க்கு வோட்டுச் செய்து உதவும்படி உத்தரவிடுகிறதோ, அதுபோன்று நம் தலைமைக் குழு நம்மவர் நிறைந்து இருக்கும் ஊர்களில் நிற்கும் அபேட்சகரின் நன்னிலைக் குறித்து உதவ நம் இனத்தவருக்கு அறிவிக்க வேண்டும். நம் வோட்டளிப்பு குறித்து இந்நிலைமை யிருக்க நாமே அரசியலிலே அங்கம் பெற முயற்சிக்க வேண்டும். அது பத்தர் போன்றவர்க்கு ஏற்பட்ட தாக்குதலாக இல்லாமல் இருக்க நம்மவர்கள் அதிகம்பேர் வசிக்கும் ஊர்களில் நாட்டுக்கு உழைக்கும் அறிவுடையோனை அபேட்சகராக்கி, நம்மினத்தவர் அத்தனை பேரும் மொத்தமாக நின்று ஆதரிக்கும் நிலை ஏற்படவேண்டும். அரசியலிலே அங்கம் அடைய ஆவலுடையோரை ஆதரிக்கும் போது அத ஒரு தனிப்பட்ட கட்சிக்காக மட்டும் விட்டுவிடக் கூடாது. அக்கட்சி அரசியலிலே சிறந்ததாகத் தோன்றினாலும் அதிலிருக்கும் அத்தனைபேரும் அறிவுடையோர் என்று தப்புக்

கணக்குப் போடக்கூடாது. ஆதலின் அறிவுடையோனது ஆக்கம் கண்டு அறிவித்தல் வேண்டும். இம்மாதிரி நம்மினத்தவர் நூல்களில் அன்றாடம் நடக்கும் அரசியல் நிலைமைகளை நம்மினத்தவர் கண்டறிய செய்திச் சுருக்கங்களை விரிவாக வரைதல் நன்று. நம்மைப்பற்றி அறிய பர்வதவர்த்தனியைப் பரவச் செய்தல் வேண்டும்.

பாரிலே படிப்பற்றவர் அதிகமுள்ள நாடு இந்திய நாடு என்றால், அதில் பெரும்பகுதியினர் நாமாக இருப்போமோ என்று ஐயப்பட வேண்டியிருக்கிறது. இதற்குக் காரணம் நம் பர்வத மக்களின் எண்ணிக்கை பெருகுகிறதே தவிர ஆற்றலிலே வற்றிக் கொண்டு வருகிறது. விஞ்ஞான உலகில் அஞ்ஞானத்திலே நம் இனத்தவர் செல்வது எதிர்காலத்தின் சீர்கேடேயாகும். கல்வியின் பலனை புலனுக்கு வலியுறுத்தாதவரை நம் மக்கள், தான் ஒரு நாள் சம்பாதித்ததுதான், தான் கண்டது. அவன் மனைவி மக்களுடன் உண்டு உறங்குவதைத்தான் உயர்வாக எண்ணுவான். இந்நிலையால்தான் தன் பிள்ளை வயது வருமுன்பே அவனையும் தன் பாட்டன் தொழிலுக்கே அழைத்துக்கொள்ளுகிறான். அது அவனுடைய கீழ்நோக்கு எண்ணம். நாமெல்லாம் படிக்கலாமா அது மேலினத்தவருக்கே உரியது என்ற தவறான எண்ணம், இன்றைய நம் நாட்டின் அரசியலை அறியாதது பெரும் தவறே என்றால் அது மிகையாகாது. நிற்க நம்மினந் தலைமைக் குழுவினர் உயர்நிலைப் பள்ளி படிப்பை இலவசமாகப் பயில்விக்க அரசியலாரிடம் வற்புறுத்துகிறது. உண்ண உணவும் உதவக் கோருகிறது. இந்நிலை போற்றுதற்குரியதுதான். ஆனால், இதைக்காட்டிலும் மிகச் சிறந்ததை மறந்துவிட்டனர். இக்காலத்தில் பள்ளி இறுதிப் படிவம் (S.S.L.C.) படித்தவன் முன்னேறிவிட இயலாது என்பது தெற்றெனத் தெரிந்தது. நிற்க இந்தப்பள்ளி இறுதிப் படிவம் வரை பயிலுவிக்கச் செய்வித்தல் ஒரு தகப்பனின் கடமையும்கூட. இறுதிப் படிவம் படிக்க மிக்க முயற்சி தேவையில்லையே! நம் கருணை அரசியல் எட்டாம் வகுப்புவரை இலவசமாகப் படிக்கவும் அதற்குமேலே அரைச்சம்பளமும் தானே வைத்திருக்கிறது. ஆதலின் இப்படிப்பை ஒரு தகப்பனே தன் பிள்ளைக்கு அளிக்க முடியும் என்பதில் ஐயமில்லை. ஆதலால் நம் குழுவினர், இறுதிப் படிப்புப் படித்து வறிதே இருப்பவர்களை மேன்மையுறக் கல்லூரியிலே கல்வி கற்கத்தக்க நிலை உண்டாக்க, உணவு விடுதி வைத்து இலவசமாகப் பயில உதவுவார்களேயானல் பத்தாண்டுகளிலே நம் எதிர்காலம் மேன்மை அடைவது திண்ணம். இந்நிலை நூறு பேர் பள்ளி இறுதிப்படிவம் படித்து வேலையற்று இருப்பதைக் காட்டிலும் பத்துப்பேர் பட்டப்படிப்பு படிப்பது சிறந்தது. தங்கள் விடாமுயற்சியாலும், பதவியிலுள்ள நன்னிலையாலும் வன்னிய மக்களும் கல்லூரியிலே இலவசமாகப் பயில உரிமை பெற்றுவிட்டனர். அந்நிலைக்கு மாற நாமும் ஏன் முயற்சிக்கக் கூடாது? அவர்களைக் காட்டிலும் சீர்கேடான நிலைமையில்

உள்ள நாம், எண்ணிக்கையில் குறைந்த நாம், பதவிகளை அறியாத நாம் அரசியலில் பதவிவகிக்க வேண்டும்.

நாம் இன்றைய நாகரிக உலகிலே பழைய மூட நம்பிக்கை இவைகளில் விழுந்துகிடப்பது பலர் எள்ளி நகையாட ஏதுவாகிறது. மேலை நாடுகளை நோக்கும்போது எந்த ஒரு மனிதனும் எந்தத் தொழில் புரிந்தபோதிலும், அந்தத் தொழில் செய்த நேரம் போக மற்றக் காலத்தில் மற்ற மக்களுடன் சமமாகப் பங்கெடுத்துக்கொள்ளுகிறுன். ஆனுல் நம்மவர் தொழில்புரிந்த நேரம்போக மற்ற நேரத்திலேயும் சேற்றிலே எண்ணத்தைச் சிக்கவைத்துவிடுகின்றனர். நம் அரசியல் மீன் இலாகாவுக்காக ஒதுக்கிவைத்துள்ள கோடிகள் கணக்கில. ஆனுல் அங்கம் பெறுபவரோ அந்நியர். இந்நிலை போக்க நமக்கு நிலையான இடம் (Reserved Seat) அளிக்க அரசியலிடம் விண்ணப்பிக்க வேண்டுய்.

நாம் இவ்வுலக மக்களின் எக்களிப்புக்கு இடமில்லாமல் மக்கள் மன்றத்தில் நாமும் ஒரு அங்கம் என்பதை அச்சுறுத்த ஆசைகொண்டால், நம்மின வளர்ச்சியே நம் வளர்ச்சி என்ற எண்ணத்தை மனத்தில் இறுத்தி, ஒற்றுமையிலே பற்றுள்ளவனுக அரசியலிலே அங்கம் பெற உரிமை உண்டு என்பதை உணர்ந்தவனுக, பட்டம் பெற்று பிறநாட்டு அழைப்புக்குத் தான் ஏற்றவனுக, நாகரிகத்திலே நாட்டம் கொண்டவனுக, நல்லபல கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டவனுக முன்வர நம் வாலிபர்களை அழைக்கின்றேன்.

மீனவர் ஜீவாதாரத்தின் திருத்தம்

மீனவர்களின் நிலையை உயர்த்தவும் மீன் வளத்தைப் பெருக்கவும் மீன் இலாகா இருப்பதாகச் சொல்லப்படுகிறது. மீனவர்களின் உயிர்நாடியாய் இருப்பது மீன் தொழில். மீனவர்களுக்கு உபகாரமாயிருப்பது G.O. 200, B.S.O. 211 மற்றும் இவைபோன்றவைகளாகும். இவைகளால் மீன் இலாகாவுக்குச் சொந்தமான ஆறு, ஏரி, குளம் முதலிய நீர்நிலைகள், மற்றும் சில பெரிய நீர்நிலைகள் முதலியவைகளிலுள்ள மீன்பிடிக்கும் உரிமையை மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு 5 வருட சராசரி குத்தகைக்குக் கொடுப்பது என்பது.

இந்த உத்தரவு இருக்கிறபோதே எப்படி நடைபெறுகிறது என்பவற்றைச் சொல்லவேண்டியிருக்கிறது. மீனவர்களின் நிலை தினந்தோறும் வலைபோட்டு மீன்பிடித்துக் காலங்கழிப்பது. வருடமுழுவதும் மீன் தொழில் செய்பவன் அவ்வவ்விடங்களில் உள்ள மற்ற இனத்தவர்களின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளா

கின்றுன் என்பதை யாவரும் அறிவர். மீன் பிடிப்பவன் ஏழை; ஜீவகாருண்யமற்றவன் என்று வைதிகர்களாலும், நாகரிகமற்றவன், சுகாதாரமற்றவன் என மற்ற இனத்தவர்களாலும் புறக்கணிக்கப்பட்டவன். வாயற்ற பூச்சியாக இருப்பதால் மற்றவர்கள் எள்ளி நகையாடுவதற்குக் கேட்கவா வேண்டும்?

இதனுல், மீனவர்களைப் பயமுறுத்தி எல்லா வேலைகளையும் அவர்களிடமிருந்து வாங்கிக்கொள்ளுகிருர்கள். மீன் குத்தகையைத் தாங்கள் எடுத்துக்கொண்டு அதிலும் இலாபம் வைத்துக்கொண்டு மீனவர்களுக்குக் கொடுக்கிருர்கள். தனிப்பட்ட நபர்கள் குத்தகை எடுத்தால் மீனவர்களைக்கொண்டே பிடிக்கச் செய்து மிகமிகக் குறைந்த கூலியைத் தங்கள் அசல்தொகை சேர்ந்தபின்னர்தான் கொடுக்கிருர்கள். நஷ்டம் வருமெனத் தெரிந்தால் அவர்களையே வற்புறுத்தி, தாங்கள் எடுத்த குத்தகைத் தொகைக்கு மேல் இலாபம் வைத்துப் பெற்றுக்கொள்ளுகிருர்கள். இத்தகைய காரணங்களால்தான் வெளியார்கள் குத்தகை அல்லது ஏலம் அதிகமாகக் கேட்கிருர்கள். அவர்களுக்குக் குத்தகை கொடுப்பதைப் பற்றி யாரும் ஆட்சேபிக்கவில்லை. ஆனுல், அவர்களோ அவர்கள் உறவினர்களோ அதில் மீன் பிடிக்கிருர்களா? அவர்கள் அதில் தொழில் செய்தால் அவர்களுக்கு விடுவதைப் பற்றி தடுப்பார் யாவரும் இலர். பரம்பரையாகவே சைவக் குடும்பத்தில் பிறந்தவர்களும், பிராமணர்களும் கூட மீன் குத்தகை எடுக்கிருர்கள் என்றுல் அவர்கள் கருத்துத்தான் என்ன என்பதை அறிய வேண்டும்?

அதிகாரிகள் ஏலம் விடுகின்ற காலத்தில் மீனவர் யாரும் ஏலம் கேட்க முன்வரமாட்டார்கள். முதலாவது பணம் கிடையாது; பணம் கடன்வாங்கி வந்தாலும் போட்டாபோட்டியில் ஏலம் கேட்கத் துணிவிருக்காது; துணிவிருந்து ஏலம் கேட்டால் ஊரில் நிம்மதியாய் வாழமுடியாது. அதனுல்தான் எல்லா நீர் நிலைகளையும் மீன் இலாக்காவே எடுத்துக்கொண்டு 5 வருட சராசரிக்கு மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுக்கவேண்டும் என்று அரசாங்கத்தையும் சென்ற 20 வருட காலமாக மீன் இலாக்காவையும் கேட்டுக்கொண்டு வருகின்ருேம்.

ஓர் ஏரியைப் பரம்பரையாய் நூறு ரூபாய்க்கு அவ்வூரார்கள் எடுத்துக்கொண்டிருப்பார்கள். மீனவர் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பித்த பின் அந்த ஏரியை 5 வருட சராசரித் தொகையாகிய நூறுக்கோ, நூற்றிருபதுக்கோ கேட்டால், இதுவரையில் நூறு ரூபாய்க்கு எடுத்துவந்தவர்கள் ரூபாய் ஆயிரம்வரைக்கும் கேட்கப் பின்வாங்கமாட்டார்கள். அதில் மீன் அவ்வளவுக்கு இருக்கிறதா? இலாபம் வருமா? என்பதைப்பற்றிக் கேள்வியில்லை. மீனவர்களுக்குக் கொடுக்கக்கூடாது; அவன் மற்றவர்களுக்கு அடங்காமல் தனியே எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதே அவர்கள் கருத்து. 400 பேர்கள் இருக்கும் கிராமத்தில் ஆளுக்கு ஒன்றிரண்டு

போட்டுக் கொடுக்கவும் தயார். ஆனால், அதே நிலையில் கொஞ்சம் பேர்களே வசிக்கும் மீனவர்கள் எப்படி நஷ்டத்தைக் கொடுக்க முடியும்? ஆனால் அரசாங்கம் என்ன நினைக்கிறது? அந்த ஏரியில் மீன் இல்லாமலா அவ்வளவு தொகைக்குக் கேட்கிறார்கள்? மீனவர்கள் அரசாங்கத்திற்கு வரும் வரும்படியை மோசம் செய்யப் பார்க்கிறார்கள் என உடனே குற்றம் சுமத்துகிறார்கள். இதில் கவனிக்கவேண்டிய அம்சங்கள் பல இருக்கின்றன.

மீனவர் கேட்பதற்குமுன் அக்குறிப்பிட்ட ஏரியை அவ்வளவு தொகைக்கு யாராவது கேட்டார்களா? ஏன் கேட்கவில்லை? அப்போது அதில் மீன்கள் இல்லையா? அவர்கள் எவ்வளவு லாபம் வைத்துக்கொண்டு மீனவர்களுக்கு விட்டார்கள்? எவ்வளவு தூரம் மீனவர்களிடம் வேலை வாங்கிக்கொண்டார்கள்? எவ்வளவு தூரம் மீனவர்களை அடிமைப்படுத்தி வைத்திருந்தார்கள்? இவைகளைக் கவனிப்பார் யார்? மேலும் மீனவர்கள் குத்தகை எடுத்தால் அது அவர்களுக்கு அந்தஸ்து குறைவு என்றும் நினைக்கிறார்கள். இன்னொன்று, அவர்களுக்கு வேறு தொழில்கள் இருக்கின்றன; பணக்காரர்கள்கூட; வேண்டியதை வேண்டியபடி பெறக்கூடியவர்கள். ஆனால், மீனவர்கள் அந்த ஏரியில்தான் வருடம் முழுவதும் ஜீவித்தாகவேண்டும். அவன் வாழ்விற்கு அதுதான் அடிப்படை. இது அவன் ஜீவாதாரமான பிரச்சினை. மீன் அதிகமாக இருந்தாலும் வருடம் முழுவதும் அதை நம்பித்தான் வாழவேண்டியிருக்கிறது. வெளியார் அப்படியில்லை. எல்லாச் சமயங்களிலும் கட்டுப்படுத்திக் காவல்வைத்துவிட்டு 'நீர்வடியும் காலத்துக் குறைந்த கூலி கொடுத்துப் பிடிக்கச் செய்து இலாபம் அனுபவிக்கின்றார்கள். இம்மாதிரியான நிலையில் வெளியார்கள் அதிகத் தொகைக்குக் கேட்பார்களா? மீனவர்கள் அதிகத் தொகைக்குக் கேட்பார்களா? என்பதை அரசாங்கம் அறிய வேண்டும்.

கிராமங்களில் மீனவர்கள் படும் அவஸ்தையினால் அனேக இடங்களில் மீன் கிடைப்பதும் அரிதாகிவிட்டது. மக்களுக்குக் கருவாடு சாப்பிடும் பழக்கம் அதிகமாய்விட்டது.

காலமெல்லாம் மீன்பிடிக்கும் யாராவது ஒருவர் ஓர் ஆயிரம் ரூபாய் சேர்த்து வீடுகட்டியோ, நிலம் வாங்கியோ, நகை செய்தோ வாழ்ந்ததை நாம் அறியோம். ஏனெனில் இத்தொழிலில் வரும்படி மிகவும் குறைவு; தொழிலும் மதிப்பற்ற தொழில். இந்நிலையில் மீனவர்கள் மற்றதொழில்களில்சிறுகச் சிறுகப் பிரவேசிக்கிறார்கள். அதனால்தான் இம்மரபுப் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி கொடுங்கள்; உத்தியோகத்தில் சலுகை காட்டுங்கள் என்று அடிக்கடி வற்புறுத்துகின்றோம். இம்மாதிரி போய்க்கொண்டேயிருந்தால் இன்னும் சில ஆண்டுகளில் இவ்வினத்தவர் பெரும்பாலும் இத்தொழிலைச் செய்வது அரிது எனவே நம்பவேண்டியிருக்கிறது. மீன் தொழிலை அபிவிருத்திசெய்வது என்பது வெறும் ஏட்டளவில் இருக்குமேயொழிய செய்கையில் இருக்காது. நீர் வடியும் காலத்தில் வேண்டுமானால் மீன் கிடைக்குமே தவிர, மற்றக் காலங்களில்

மீனைப் பார்ப்பதற்கும் அரிதாய்விடும். சமுத்திரத்தில் கிடைக்கக் கூடிய மீன்கள் உள்நாட்டில் எல்லா இடங்களிலும் கிடைக்கும் என்று நம்புவதற்கு இடமே இல்லை.

சமுத்திரத்தில் கிடைக்கும் மீன்களைவிட உள்நாட்டில் கிடைக்கும் மீன்கள் அதிக உருசியுள்ளது; விலை குறைந்தது; அதிகச் சத்துள்ளது; புத்தம் புதியதாகக் கிடைப்பது என்ற உண்மைகளெல்லாம் அரசியலாருக்கும், அதிகாரிகளுக்கும் நன்கு தெரியும். தெரிந்தாலும் அதைப்பற்றிக் கவனிப்பதுதான் கிடையாது. மீனவர்களின் மீதுள்ள அருவருப்பு மீன் விற்கும் மார்க்கட்டுகளிலும் செல்லுகிறது. மற்ற உணவுப் பண்டங்கள் விற்கும் இடங்களுக்கும் மீன் விற்கும் இடங்களுக்கும் எவ்வளவோ வித்தியாசங்கள் இருக்கின்றன என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். ஆனால், வாடகை வாங்குவதோ மற்ற இடங்களைவிட இதற்கு மிகவும் அதிகம். அந்த இடத்தில் அநேகர் போவதற்குக்கூட அஞ்சுகிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

மீனவர்களின் கூக்குரல் அரசாங்கத்தாரின் செவிகளுக்கு எட்டவே இல்லை. இப்போதுதான் ஆங்காங்கு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பித்துக்கொண்டு வருகின்றோம். இன்னும் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்காத இடங்கள் அதிகம் இருக்கின்றன. எல்லா நீர்நிலைகளையும் மீன் இலாக்காவே எடுத்துக்கொள்ளுங்கள் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டே வருகின்றோம். இந்த நேரத்தில், 1—10—56-லும் 2—2—57-லும் ஆக இரண்டு திருத்தங்கள் வேறு வந்திருக்கிறது. அதில் மீனவர்களுக்கு மீன் பிடிக்க குத்தகை எடுக்கும் உரிமை கிடையாது; ஏலம்தான் எடுக்க வேண்டும் என்பதைப் பார்த்து அழுவதா? அல்லது சிரிப்பதா? என்பதே தெரியவில்லை. இப்பொழுது மீன்பிடிப்பவர்களெல்லாம் நிம்மதியாய், ஆனந்தமாய், பணக்காரர்களாய் வாழ்கிறார்கள் என்று கருதிவிட்டார்கள் போலும். பழைய கருப்பனே கருப்பனாய்த்தான் மீனவன் இருக்கின்றான். பார்க்கப்போனால் முன்னை விட மிகவும் கேவலமான நிலையில் இருக்கின்றான் என்பதை அரசாங்கம் உணரவேண்டும். இத்தொழிலையும், இதனால் மற்றவர்களுக்கு அடிமையாகிக் கிடக்கும் நிலையையும் ஒழித்து மற்ற தொழில்களைச் செய்யும் சிலரைக்கொண்டு அரசாங்கம் மதிப்பிடக் கூடாது என்பதே நாங்கள் வேண்டுவது.

உண்மையில் மீன்வளம் பெருகவேண்டும், எல்லாருக்கும் மீன் கிடைக்கவேண்டும், மீன் பிடிப்பவன் உயரவேண்டும், அவனும் மனிதன்தான் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கும், அரசியல் தலைவர்களுக்கும், மீன் இலாக்கா அதிகாரிகளுக்கும் இருக்குமானால், உள்நாட்டிலுள்ள எல்லா நீர்நிலைகளையும் மீன் இலாக்காவே ஏற்றுக்கொண்டு, மீனவர் சொசைட்டிகளுக்கு ஐந்து ஆண்டு சராசரிக்குக் குத்தகை தந்து ஆதரிக்கவேண்டும். இப்போது பிறப்பித்துள்ள திருத்தத்தை உடனே மாற்ற வேண்டும். இவைகள் இருக்கும்வரையில் இச்சமுதாயம் உயர்வதற்கு

எந்தவிதமான வழியும் இல்லை என்பதை ஜீவாதாரத்தின்மீது உறுதியாகச் சொல்ல விரும்புகின்றோம்.

இல்லாவிடில் மீன் இலாக்காவே நேரில்வந்து மீன்பிடித்து மீனவர்களுக்குக் கூலி கொடுக்கட்டும். அது சாலச் சிறந்தது. இல்லையேல், மீனவர்களுக்கு லைசென்சு வழங்கி எந்த இடத்திலும் அவர்கள் பிழைத்துக்கொள்ளலாம் என்று உத்தரவிடட்டும். இவ்விரண்டில் ஒன்று செய்வார்களானால் இவ்வினத்தவர்களைக் கைதூக்கிவிட்ட நிலையினர் ஆவார்கள்.

இதில் அரசாங்கத்திற்கு எவ்விதமான நஷ்டமும் வரக் காரணமே இல்லை. ஒரு ஊரிலுள்ள நீர்நிலைகளைக் கணக்கிட்டு அதில் உள்ள மீன் மதிப்பையும், மீனவர் ஜனத்தொகையையும் கணக்கிட்டு மாதத்துக்கோ அல்லது வருஷத்துக்கோ இவ்வளவு என்று ஏற்படுத்தி வசூல் செய்துகொள்ளலாம். அதனால், மீனவ மக்கள் மற்ற இனத்தவர்களின் தொந்தரவுக்கும், தொல்லைகளுக் கும் ஆளாகவும் மாட்டார்கள்; தங்கள் தொழிலை நன்றாகவும் செய்வார்கள்.

ஆகையால், இப்போது பிறப்பித்த திருத்தத்தை ரத்துசெய்து எல்லா நீர்நிலைகளையும் மீன் இலாக்காவே எடுத்துக்கொண்டு, மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு 5 வருட சராசரி தொகைக்குக் குத்தகை விடவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றனம். அர சாங்கம் இதனைப் புனராலோசனை செய்யவேண்டுமென்றும் இறைஞ்சுகின்றனம்.

தலைவர்,

சென்னை ராஜ்ய பருவத ராஜகுல சங்கம்.

யார் பெற்ற செல்வம்?

திரு. M A. C. பச்சையப்பா, கும்பகோணம்.

6-வது சீன்

(சிங்கப்பட்டி செல்வந்தர் செங்கல்வராய பக்தர். ஈஸிச்சேரில் சாய்ந்தபடி, வேலைக்காரன் டல்லைக் கூப்பிடுகிறார்.)

செல்: டல்லு! டேய், டல்லு!

டல்லு: (உள்ளிருந்து ஓடிவந்தபடி) என்னைக் கூப்டீங்களா எஜமான்?

செல்: எலோய்! எங்கடா, நம்ப ராஜாவும் பருவதாவும்?

டல்: எஜமான் நம்ப பருவதாவும், ராஜா தம்பியும் தோட் டத்துப் பக்கமா போனாங்க! ஆனா...!

செல்: ஏண்டாப்பா. தவம் பண்ணவா?

டல்: இல்லே எஜமான்! கண்ணும்பூச்சி விளையாடி காத்து வாங்க!

செல்: இருக்கலாண்டா, டல்லு! ஏன்னு, இன்று பௌர்ணமியல்லவா? மேலும் பாலப்பருவம்! பக்குவமான வயது இருவருக்கும்! இல்லையா டல்லு?

டல்: சொல்வதற்கு நல்லு இல்லை எஜமான் இங்கே!

செல்: ஆமாண்டா நீ எங்கே முந்தி சொல்லிடப்போறியோன்னு நினைச்சி, நான் சொல்லிட்டேண்டா?

டல்: விளையாட்டால்லா இருக்கு, என்னயிடியாவை அப்படியே புட்டுவச்சாப்போல சொல்லிப்புட்டீங்களே?

செல்: மேப்பெடுத்துப் பாருடா. நல்லாத் தெரியும்!

டல்: தெரிகிறதென்னுங்க! உலகமே உருண்டை வடிவமுன்னு, எத்தனையோ ஆராய்ச்சியாளர்கள் சொல்லிக்கிட்டு இருப்பதை இந்தக் காதால் கேட்டுக்கிட்டுத்தானே இருக்கிறோம். ...ம் எஜமான்! அதோ தம்பியும் பருவதம்மாவும் வந்துகிட்டே இருக்காங்க!

செல்: வா ராஜா! வாம்மா பருவதா! இப்படி உட்காருங்கள்!

ராஜா: (உட்கார்ந்தபடி) மாமா! இன்றுடன் எனக்குக் காலேஜ் படிப்பு முடிவடைகிறது.

செல்: ஆமாம் ராஜா! நானும் இப்பொழுது அதைப்பற்றி தான் யோசனை செய்துகொண்டிருந்தேன்! ஒரு திட்டமும் போட்டுவிட்டேன் ராஜா!

டல்: (குறுக்கிட்டு) ஐந்தாண்டு திட்டமா எஜமான்?

செல்: மட்டமான புத்திடா உனக்கு!

டல்: எனக்கு தெரியலே எஜமான்!

பரு: என்ன திட்டமப்பா அது? ஏற்பாடு வலுவாகத்தான் போட்டிருப்பீர்கள். இல்லையா அப்பா?

செல்: பருவதா! உங்களிருவரின் நன்மையைக் கருதியே பெரிய ஏற்பாடு செய்திருக்கிறேன் கண்ணே!

ராஜா: பார்த்தாயா பருவதா?

செல்: ஆம் ராஜா! உங்கள் பிற்கால வாழ்க்கைக்கு வழி வகுப்பதுதான் நான் போட்டிருக்கும் வலுவான திட்டம்!

பரு: என்ன திட்டமப்பா அது? சொல்லுங்கள் சீக்கிரம்!

செல்: பருவதா கேள்! நம் ராஜாவை அயல்நாட்டுக்கு அனுப்பித் தொழில் நுணுக்கங்களை அறிந்துவர, ஏற்பாடு செய்திருக்கேனம்மா!

பரு: என்ன! நம் அத்தானையா? அயல் நாட்டுக்கா?

செல்: ஏம்மா ஆச்சரியப்படுகிறாய்?

பரு: இல்லேப்பா நம் அத்தான் அயல்நாடு போனு......?

செல்: கண்டபடி ஊர் சுற்றுவானே என்கிற எண்ணமா பருவதா ?

பரு: வெள்ளைக்கார மாதுகளுடன் உல்லாசமாக ஊர் சுற்றித் தொல்லைதரும் மதுவரக்கன் வலையில் விழுந்துவிட்டால் மீள முடியாதே என்கிற கவலைதான் எனக்கு!

ராஜா: ஏதேது பழக்கப்பட்டதுபோல் பாவித்துப் பேசுகிறாயே ?

டல்: (குறுக்கிட்டு) இல்லே தம்பி! அங்குப் போகிறவர்கள் அநேகமா கெட்டுவருவதாகக் கேள்விப்பட்டிருக்கும். அதுதான் கேட்கிறது. எல்லாம் நாம்ப நடந்துகொள்றதிலேயிருக்கு!

செல்: எலே நீ அதை எடுத்துச்சொல்ல வந்துட்டியாக்கும்! சரி சரி போடா! இங்கே பாரம்மா. நம்ம ராஜா அங்கே போனா ரொம்பநாளைக்கா தங்கப்போறான்? இரண்டு வருஷம் இல்லேன்னா மூனு வருஷம். அப்புறம் இங்கே வந்ததும் உங்கள் இஷ்டம் போல இருக்கப்போகிறீர்கள்! இல்லையா ?

பரு: உங்களிஷ்டமப்பா. மிக்க சந்தோஷம்.

டல்: எஜமான் நம்ப பருவதம்மாவுக்கு மூனு வருஷமுன்னதும் மூச்சே நின்னுடுமுன்னு பயந்துட்டேன் எஜமான்.

செல்: அடடா! அடிக்கடி இவனுக்கு மாருட்டமல்ல ஏற்படுது!

டல்: அய்யய்யோ! அய்யய்யோ! எஜமான் சத்தியமா சொல்றேன். நான் அந்தமாதிரியான போராட்டத்திற்கெல்லாம் போறதேயில்லீங்களே.

செல்: சரி, சரி. பயலிடம் பேச்சுக்கொடுத்தா விடிய விடிய விடமாட்டான். வா ராஜா, வா பருவதா சாப்பிடப்போகலாம்.

7-வது சீன்

(டல்லு வீடு)

(தன் மனைவி நல்லு, வீட்டுத் திண்ணையில் கன்னத்தில் கையை வைத்தபடி உட்கார்ந்திருக்கிறாள். அதுசமயம் வெகு வேகமாய் கையில் கிராஸ்வேர்ட்ஸ் கூப்பனுடன் உள்ளே நுழையும் டல்லைப் பார்த்ததும்)

நல்லு: ஊஹும். வாங்க வாங்க! ஏன்னா இன்னைக்கு இவ்வளவுநேரம் ?

டல்: (ஓரமாய் நின்று) ஏண்டியம்மா. என்ன வரவேற்பு வலுவா இருக்கு? ஆமா, பொழுதுபோன நேரத்திலே, கன்னத்திலே கையைவச்சிகிட்டு யோசனை செய்துகிட்டிருக்கியே ஏன் ஒங்கப்பரூட்டு கப்பலா கவுந்துபோச்சி ?

நல்: ஆமா...! சொப்பனத்திலேகூட கப்பலைக் கண்டிருக்க மாட்டே நீ. வம்பு வளர்த்தமட்டும்......

டல்: தெம்பு இல்லேன்னு நினைக்கிறியாடி? இங்கே பாருடீ நான் கனவுலே கப்பலைக் காணுறது இருக்கட்டும். இப்போ நெனச்சேன்னா ... ...

நல் : ஆஹா ஹா ஹா ! இந்தக்கையிலே யிருக்கிற கடுதாசி யாலே, கப்பலா செய்து தெப்பக் குளத்திலே மிதக்கவிட்டிட மாட்டீங்களா

டல் : ப்பூ...ன்னும் ! நம்பளே யாருன்னுடி நினைச்சே ?

நல் : ஆஹா ! தெரியாம என்ன ? கப்பலோட்டிய தமி ழனின் பரம்பரையில் பிறந்தவரல்லவா நீங்க !

டல் : பின்னே என்னடி. கொஞ்சம் தாண்டி. தூரத்து உறவு ! ம்...இவ்வளவும் தெரிந்திருந்தும் நம்பளை மட்டந்தட்டித் தானே பேசுறே ? இந்தா பாரு நல்லு நல்லாவேயில்லை சொல் லிட்டேன். ஆமா !

நல் : ஏங்க இப்படி சிடுசிடுன்னு பேசுறீங்க ? மச்சான் இங்கே பாருங்களேன். அதெல்லாம் கிடக்கட்டும் ... ...

டல் : இந்தக் கிழவியைத் தூக்கி மடியிலே வச்சிக்கேன்னு சொல்றே !

நல் : இந்தா பாருங்கோ ! இப்போ உங்க கண்ணுக்கு அப் படித்தான் தெரியும் ! என்ன, உங்கமேலே பிசகில்லே என்னைச் சொல்லணும் !

டல் : நல்லா சொல்லட்டுமே ! யார் வேண்டான்னுங்க ! என்ன, உங்கப்பமூட்டுலேயிருந்து கொண்டுவந்து குவிச்சிட்டே பாரு அதனாலே நீயும் சொல்லுவே ? இங்கு இருக்கிறவங்களும் சொல்லுவாங்கோ ? போடி ... போடி ...

நல்லு : அட அநியாயக்கார நாடே ! கேழ்க்க நாதியில்லியா ? ம் ... அய்யாவுக்கு மொதலே வேறல்ல தூக்கிக் கொடுக்கணுமாம். அடி காளியாயி நீதான் துணை !

டல் : காளியாயி கிழவியாப்போயி வெகுகாலமாயிட்டுதேடி. காளியாயி துணையாம் காளியாயி ! நான் ஒருவன் இருக்கேன்னு கூட நினைக்காமே இவபாட்டுக்கு கடவுளையெல்லாம் நோகருய்யா ! ம் ... அடடா நீ என்னைக் கட்டிக்கும்போது அலைஞ்சதைப் பார்த்தா இவ ஏனிப்படி குட்டிப்போட்ட பூனையாட்டம் அதுக் கும் இதுக்கும் அலைஞ்சான்னு இன்னும் ஆச்சரியப்படணும்.

நல் : ஆமா ! வெளியிலே சொல்லாதீங்க வெட்கக்கேடு. ஆத்தங்கரைக்கும் எங்க வீட்டுக்குமா அலைஞ்சது யாருன்னு, நெஞ் சிலே கையைவச்சிப் பாருங்களேன் !

டல் : அப்படி அலைஞ்சதினுல்தாண்டி அல்வாதுண்டு மாதிரி எனக்குக் கெடச்சே நீ ! இவ்வளவுக்கும் காரணம் யார் தெரி யுமா நல்லு.

நல் : ம்...ம்... தெரியும் ! எல்லாத்துக்கும் காரணம் நான் தான்.

டல் : உஹ்ஹூம் ! அதானில்லே ! நம்ப ஆத்தங்கரையில் தோன்றியிருக்கும் விடிவெள்ளிப் பிள்ளையாரின் அருள்தாண்டி யம்மா அருள் தான் !

நல் : ஏன் வெறும் வீசு வீசுறே ? இந்த நல்லம்மா பார்த்துச் சரி சொல்லலேன்னு ! விடிவெள்ளிப் பிள்ளையாரின் அருள் தெரு

வோட நின்னிருக்கும் தெரியுமா?

டல்: ம்...ஆமா! உன்னுடைய சரிகமாவுக்கும், அந்த விடி வெள்ளிப் பிள்ளையாரின் அருளுக்கும் என்னுத்தே சொல்றது நல்லு! போகட்டும் நம்மைச் சேர்த்துவைத்த தெய்வத்துக்கு நான் வேண்டியிருப்பது உனக்குத் தெரியுமா நல்லு!

நல்: என்னுன்னு மச்சான்! நாக்கை அறுக்குறேன்னு? இல்லே, பிள்ளை பொறந்தா காவு கொடுக்குறேன்னு!

டல்: நல்லாருக்கு நல்லு உன்போக்கு! உயிரைக்கொடுத்த தெய்வத்துக்குப்போய் நமக்குப்பிறக்கும் பிள்ளையைப் பலிகொடுப்பதா? ஏண்டி இன்னும் அந்தப் புராணகால மூடநம்பிக்கையை நினைத்துக்கொண்டிருக்கிறே?

நல்: சரிதான் போங்க! சிறுத்தொண்டர் நாயனர் சரித்திரத்தை நீங்கதான் கரைத்துக் குடித்தவராச்சே!

டல்: அதற்காக பிள்ளையை அறுத்துக் கரி சமைப்பதா? போடி ... போடி . . .! அப்படி சாமிக்கு வேண்டிக்கிட்டா நிறைய சூடத்தைக் கொளுத்து! சாம்ருணியைப் பொடு! இல்லேன்னு மாலையை வாங்கி சாமியின் உருவந் தெரியாமலே மூடி வேணுமுன்னுலும் போடு! யார் வேண்டாங்கரா! ம் ... நல்ல பொண்ணுடி நீ! ஆமா ஏன்நல்லு, உங்கபாட்டன் பாட்டி சொல்லிகிட்டிருந்ததைப் பாடம்பண்ணி மறக்காமே வச்சிருக்கியே ஜங்கிள் மாதிரி!

நல்: இந்தாங்க! ஏது ஜங்கில் கிங்கிளிங்கிறீங்க? பார்த்துப் பேசுங்க!

டல்: அட கடவுளே! அப்படின்னு நான் பார்க்காமே பேசுறேன்னுதான் இறக்கிறயோ இதுவரையிலும்?

நல்: ஆமா மச்சான்! இப்போ உங்களுக்குக் கடவுள் பக்தி பொங்கி வழியுறமாதிரி ஏற்பட்டுப்போயிடுச்சே. ஏன் மச்சான்?

டல்: இந்தா பாரு நல்லு. அவர் யார் தெரியுமா? ஐங்கரண்டி! அதுவும் வெள்ளிக்கிழமை விடியக்காலே வெளிக்கிளம்பியிருக்காருன்னு விபரீதம் அவர்கிட்டே அதிகமாத்தாண்டி இருக்கும்!

நல்: அதுக்காக இப்போ அவருக்கு என்ன செய்வதாய் இருக்கீங்க? அதை முதல்லே சொல்லுங்க?

டல்: கேளு, சொல்றேன்! வெள்ளியினுலே குத்து விளக்கு வாங்கி வைக்கிறேன்னு வேண்டியிருக்கேன். ம்... சரிசரி ... போ, போய் வேலேயிருந்தா பாரு, எனக்கு வேலே நிறைய இருக்கு!

நல்: ஏன் எந்த ஆபீசுலே கிளார்க்கா இருக்கீங்க? என்ன பெரட்டி எழுதப்போறீங்க?

டல்: ஏதுடா வம்பாப் போச்சி! ஏதேது என்னை எழுத விடமாட்டாப்போல இருக்கே? ஆயீ அகிலாண்டேஸ்வரி, உன் தெசைக்கே ஒரு வணக்கம். ம்... போய்வா!

நல்: சரி எனக்கு வேலேயிருக்கு நான் வாரேன்.

(தொடரும்)

வைத்தியம்

தாளிக் கீரை

தமிழ்ப்புலவர், சிவ. முருகசிவம் அவர்கள்.
[75, நைனியப்பன் தெரு, சென்னை - 1.]

எழுவகைத் தோற்றத்தில் தாவரம் ஒன்று. அது மரம், செடி, கொடி, புல், பூண்டு என்று வளர்ச்சிக்குத் தக்கபடி பல பெயர்களை யடைகின்றன. அதில் மலைகளிலிருப்பதை மலை மூலிகை என்றும் வனத்திலிருப்பதை வன மூலிகை என்றும் இடையிலிருப்பதை மருந்து வகைகள் என்றும் நம்முடன் உடனுறைந்திருப்பதைக் கீரை வகை என்றும் கூறுவார்கள். அந்தக் கீரைவகைகளில் அநேகம் இருக்கின்றன. அதில் யாருக்கும் எப்பொழுதும் ஒரு தீங்கும் செய்யாத 16 வகையான கீரைகளை யாம் எழுதிய புத்தகத்தில் பரக்கக் காணலாம். அதிலும் சிறந்ததாகக் கொள்ளப்பட்ட கீரைகள் ஐந்து. அதிலொன்று மேலேகாட்டிய தாளிக்கீரை. அது இரண்டு வகைப்படும். அவை நறுந்தாளி, பசுந்தாளி ஆகும். நறுந்தாளி வட்டவடிவமாகவும், பசுந்தாளிகொஞ்சம் நீண்ட வடிவமாகவும் இருக்கும்.



இந்தக் கீரை சென்னை, திருச்சிராப்பள்ளி மதுரை முதலிய நகரங்களில் கீரைக் கடைகளில் விற்கிறது. அன்றியும், தஞ்சாவூர் ஜில்லவில் விசேஷமாகக் கிடைக்கிறது. இது கொடியாக வேலிகளில் படர்ந்திருக்கும். பூ வெள்ளையாக இருக்கும். இலை மேலே காட்டிய வடிவத்திலிருக்கும். கீரை வழவழப்பாக இருக்கும். இதைப் பச்சையாகவும் சாப்பிடலாம்; கூட்டு பொரியல் செய்தும் சாப்பிடலாம்.

பச்சையாகப் பத்து இலைகளை நாற்பதுநாள் சாப்பிட்டு வந்தாலும், அல்லது அதிகமாக வேகவைக்காமல் கூட்டும் பொரியலும் செய்து சாப்பிட்டாலும் உடலுக்கு மிக நல்லது. சமைக்கும் முறையில் கீரையை அதி ஜாக்கிரதையாகச் சமைக்கவேண்டும். சிறிது வெந்தாலும் ஜீவசத்து (Vitamins) கெட்டுவிடும். வேகாவிட்டாலும் பதம் கெட்டுவிடும்.

ஆகவே, ஜீவசத்து அழியாமல் சமைக்க வேண்டும். இது பெண்மக்களுக்கு நன்றாகத் தெரியும். கூட்டுக்கும், பொரியலுக்கும் பருப்பும் தேங்காயும் சேர்த்துக்கொள்ளலாம். பொரிக்கும் கீரை அவியலைப்போல நீர் சுண்டாமல் இருக்கவேண்டும்.

இந்தக் கீரையினல் மனிதன் நலனே முழுவதும் கெடுக்கும் தாது பலஹீனமும், வெட்டைச்சூடும், வயிற்றுக் கடுப்பும் நீங்கும். மேலும் தேகபுஷ்டியும் தாது பலமுமுண்டாகும். எலும்புருக்கி இளைத்திருக்கும் சிறுவர் சிறுமிகளுக்கு மிகமிக நல்லது.

பசுந்தாளிக் கீரையை நெய்யிலே வதக்கிச் சிறிது சாப்பிட உஷ்ணத்தினலுண்டான இருமல் போய்விடும். உடலுக்கும் நல்லது. நறுந்தாளிக் கீரையைப் புளி நீக்கிப் பாகம் செய்து அன்னத்துடன் நெய்சேர்த்துப் பகற்பொழுதில் மாத்திரம் ஒரு மண்டலம் அளவையாக உண்ணில் புணர்ச்சியில் நீர்வாகமுண்டாகும்.

இது புது கீரையல்ல; வழக்கத்தில் விட்டுப்போனதாகும். கீரையே தெரியாதவர்களுக்கு இது வன மூலிகைபோல இருக்கும். பழமையை அறியாத தோஷத்தால் சந்தேகம் வந்துகொண்டே இருக்கிறது. தற்காலம் தாய்மார்களுக்குக் கீரை என்றஉடனே அலட்சியம். கீரையை ஆயவும் தெரிவதில்லை. கீரையை ஆயும் வேலைக்குத் தளர்ந்துவிடுகிருர்கள். ஆனல் டாக்டர் வீட்டுக்குத் தினப்படி போகச் சலிப்பதில்லை. ஒவ்வொரு தமிழனுடைய குடும்பமும் வைத்திய குடும்பம் என்பதனை மறக்கக்கூடாது. மிளகு, பூண்டு, கடுகு, சீரகம் வெந்தயம் முதலியவையும் மேல் நாட்டார் மருந்தாக மதிக்கிருர்கள்.

அன்றியும், தேடியும் சிரமப்பட்டும் செய்யும் காரியத்துக்குத்தானே மதிப்பும் பலனுமுண்டு. உதாரணமாக, உடல் உழைப்பு உள்ளவனுக்குத்தானே உடல் பலமாகவும் கட்டாகவும் இருக்கிறது. இயற்கையாக உள்ளுக்கு மருந்து சாப்பிட்டு உட்கருவிகளின் வழியாய் நோயை நீக்கிக்கொள்ளாமல் சுலபமாகச் செயற்கையில் எல்லாவற்றிற்கும் ஊசி (Injection) போட்டுக்கொண்டு உடல்நலனைக் கெடுத்துக்கொள்ளுகிருர்கள்.

தாய்மார்கள் கீரையை ஆய்ந்தெடுக்கும் சிரமம் பாராது உணவாகச் சமைத்து உண்டால் நோயில்லாமல் வாழலாம். இத்தகைய பழமையை விளக்குவதே இப்பத்திரிகையின் நோக்கமாகும்.

* * *

பர்வதவர்தனிக்கு வருட சந்தா

ரூபாய் மூன்றும்

அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகின்றனம் - ஆசிரியர்.

777

ரவாதோசை சம்பாஷணை

அருணசலம்: நேற்று இரண்டு விருந்தாளிகள் வந்தார்களப்பா! அவர்களுக்கு அவசரமாகப் பட்சணம் தயார்செய்து கொடுக்க மிகவும் சங்கடமாகி விட்டது.

ஆறுமுகம்: எதற்கு அப்பா அவ்வளவு கஷ்டப்பட வேண்டும்? நாங்கள் நேற்று திருவான்மியூருக்குப் போயிருந்தோம். நம் விஸ்வநாதன் **ஸ்ரீ கணேஷ்ராம் அண்டு கம்பெனியில்** இருந்து **777–மார்க்கு ரவா தோசை மாவு** வாங்கிக்கொண்டு வந்திருந்தான். அரைப்படி தண்ணீரில் அரை பவுண்டு மாவைப் போட்டுக் கலக்கி ரவா தோசை சுட்டான். அது எட்டு தோசைகள் ஆயிற்று. அதற்கு உப்பு, காரம், எதுவும் சேர்க்கவேண்டிய அவசியமில்லை. மிகருசிகரமாகவும், திருப்திகரமாகவும் இருந்தது. விலையும் குறைவு. நீ அதை ஒருமுறை வாங்கி உபயோகப்படுத்திப் பார். குடும்பத்திற்கும் யாத்திரைப் பிரயாணத்திற்கும் மிகவும் உபயோகமாக இருக்கிறது. விலையும் அரை பவுண்டு 0–5–0 அணதான்.

அருணசலம்: அப்படியானல் அது எங்கப்பா கிடைக்கிறது. அங்கு இன்னும் என்னென்ன கிடைக்கும் சொல்பார்ப்போம்.

ஆறுமுகம்: இவ்வளவு நாளாக அது உனக்குத் தெரியவே தெரியாதா? அதே இடத்தில் இன்னும் பலதினுசு ஊறுகாய் வகைகளும், அப்பளம், வடாம், வற்றல் முதலியவையும் கிடைக்கின்றன. நீயும் வாங்கி உபயோகித்துப்பார். மிகவும் நல்ல முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ கணேஷ்ராம் & கோ.,

46, தம்புசெட்டி தெரு, சென்னை - 1.

குறிப்பு:—ருசிகரமாகவும், சுலபமாக உடனே செய்து சாப்பிடும் வகையிலும், நல்ல சரக்குகளாலும், தயாரிக்கப்படுகிறது. ஒரு முறை வாங்கிப் பார்த்தால் அதன் உண்மை தெரியலாம்.

ஆசிரியர்.

திருக்குறள்

வித்வான் K. N.

8-ம் அதிகாரம்

அன்புடைமை

அஃதாவது இதற்குமுன் கூறப்பட்டுள்ள மனைவியும் மக்களும் முதலிய தொடர்புடையவர்களிடத்தில் காதலுடையனாதல். இல்லறம் நன்றாக நடைபெறுவதற்கும் பிற உயிர்களிடத்து அருள் பிறத்தலும் அன்பின் பயனாதலின் இது மிகவும் வேண்டியதாகும். வாழ்க்கைத் துணையாகிய மனைவியின்மேல் அன்பில்லாத வழி இல்லறம் இனிது நடக்காது என்பதனைத் "துறவாது விரதம் காப்பவராகிய பிரம்மசாரிகளுக்கு அவர்கள் விரும்பினவற்றைக் கொடுத்தலும் துறவறத்தில் நின்ற அந்தணரென்னும் வானப்பிரஸ்தரைக் காத்தலும், சந்நியாசிகளை எதிர் கொண்டுசென்று உபசரித்தலும், தொன்று தொட்டு நடைபெற்று வரும் ஒப்பற்ற சிறப்பினையுடைய அதிதிகளை எதிர்சென்று அழைத்து வந்து உண்பித்தலுமாகிய இவைகளை இழந்த என்னை" கோவலன் கூற்றாகச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கூறுவதாலும், "அன்பென்னும் அன்னையால் ஈன்றிடப்பட்ட அருளென்னுங் குழந்தை" என்றதனாலும் அறியப்படும்.

திருவள்ளுவர்

1. அன்பினுக்கும் பிறரறியாமல் அடைத்துவைக்கும் தாழ்ப்பாள் உண்டோ? தம்மால் அன்பு செய்யப்பெற்றவரது துன்பங் கண்டவிடத்தே அவர்களது கண்களிலிருந்து பொழியும் புல்லிய கண்ணீரே உள்ளே இருக்கின்ற அன்பினை எல்லோரும் அறியக் காண்பிக்கும்.

அதாவது கண்களிலிருந்து பொழிகின்ற கண்ணீரே எல்லோருக்கும் தெரியப்படுத்திவிடும்.

2. அன்பில்லாதவர்கள் பிறர்க்குப் பயன்படாமையால் எல்லாப் பொருள்களாலும் தமக்கே உரியர் ஆவர். அன்புடையவர்கள் பொருள்கள் மாத்திரமல்லாமல் தம் உடம்பாலும் பிறர்க்கு உரியர் ஆவார்.

சிபிச்சக்கரவர்த்தியைப் பரீட்சிக்க, அக்கினி புறாவாகவும்,

இந்திரன் வேடனாகவும் வடிவங் கொண்டார்கள். புரு சிபியி னிடம் அடைக்கலம் புக, வேடன் புருவைத் தனக்குத் தருமாறு சிபியை வேண்டினான். சிபி தன்னிடம் அடைக்கலம் புகுந்த புருவைவிட மனமில்லாமல் அதன் எடைக்குச் சரியாகத் தன் மாமிசத்தை அறுத்துத் தராசுத்தட்டில் வைத்து நிறுக்கும்போது புருவின் எடைக்கு மாமிசத்தின் எடை குறைவானது கண்டு தானே அத்தராசுத் தட்டிலேறிய சமயத்தில் இந்திரனும் அக்கினி யும் நேரே நின்று அச்சிபிச் சக்கரவர்த்திக்கு வேண்டிய வரங்களைத் தந்து போயினாரென்பது கதை. இதனால் அன்புடையவர் தம் உடம்பிலும் பிறருக்கு உரியர் ஆவர் என்பது பெறப்படுகின்றது.

3. பெறுதற்கு அரிய மனிதருயிர்க்கு உடம்போடு உண் டாகிய சம்பந்தத்தை அன்போடு பொருந்துவதற்கு வந்த வழியின் பயனாகும் என்று அறிந்தோர் சொல்லுவர்.

உயிர் உடம்போடு கூடினாலல்லாமல் அன்புசெய்ய முடியாதா தலால் அவ்வன்பு செய்தற்பொருட்டே இவ்வுடம்பின் தொடர்ச்சி உண்டாயிற்றென்பதாம்.

4. ஒருவனுக்குச் சம்பந்தமுடையவரிடத்தே செய்யப்பட்ட அன்பானது அத்தன்மையினாலே பிறரிடத்தே ஆசையையுடைய வனாயிருக்கையைத் தரும். ஆசையை உடையவனாயிருக்கையால் இவனுக்கு யாவரும் நட்பினரென்று சொல்லப்படுகிற சிறப்பைத் தரும்.

யாவரும் நண்பராதலால் எல்லாப் பொருளும் எய்துதற்குக் காரணமாகும்.

5. இவ்வுலகத்தில் இல்வாழ்க்கையிலே நின்று இன்பத்தை அனுபவித்தவராகி அதன்பின்னே விண்ணுலகத்திற்குச் சென்று அடையும் பேரின்பத்தினை, அன்பை உடையவராகி இல்லறத் தோடு பொருந்திய வழியின் பயனாகும் என்று அறிந்தோர் சொல்லுவர்.

இல்வாழ்க்கையில் மனைவியோடும், மக்களோடும், சுற்றத் தாரோடும் கூடி இன்பமுற்றவர் தம்மாலே செய்யப்பட்ட வேள் வித் தொழிலினாலே தேவராய்ப் பிறந்து அங்கேயும் இன்பத்தை அனுபவிப்பர் என்பதும், தவத்தினாலே துன்பப்பட்டு அடைவ தாகிய விண்ணுலக இன்பத்தை இவ்வுலகத்து இன்பமுற்று அடை வது அன்பினாலேயே என்பதும் பெறப்படுகின்றன.

6. அன்பானது தருமத்துக்கே துணையாவது என்று அறியா தார் சிலர் சொல்லுவர்; மற்றும் சினத்தை நீக்குவதற்கும் அவ் வன்பே துணையாகும்.

ஒருவன் தவறு செய்தவிடத்து உள்ளத்திலே பகைகொண்டு சினம் கொள்ளாமல் அவனை நட்பாக நினைத்து அவன்மேல் அன்பு செய்ய அது நீங்கும்,

மனைவி புதல்வர் முதலானவர்களை நல்வழிப் படுத்துவதற்குக் கொள்ளப்படும் கோபத்துக்கும் அன்பே துணையாம் எனப் பொருள் கொள்ளுதலும் இதற்குப் பொருந்தும் என்பர்.

7, எலும்பில்லாத உடம்பை வெயிலானது சுடுதல்போல் அன்பில்லாத உயிரை அறக்கடவுள் சுடுவான்.

வெறுப்பில்லாமல் எங்கும் ஒரு தன்மைத்தாகிய வெயிலின் முன்னே புழு முதலானவை தம்மியல்பால் சென்று அழிவது போல அறத்தின் முன்னே அன்பில்லாத உயிர் தம்மியல்பால் சென்று அழியும் என்பதாம்.

8. மனத்தில் அன்பில்லாத உயிர் இல்லறத்தோடு கூடி வாழ்தலானது, கடின நிலத்திலே உலர்ந்த மரமானது தளிர்த்திருப்பதைப் போன்றதாம்.

கடின நிலத்தில் மரம் தளிர்த்திராது என்பதும் அன்பில்லாமல் இல்வாழ்க்கையில் வாழ முடியாது என்பதும் பெறப்படுகிறது.

9. உடம்பினகத்தே நின்று இல்லறத்துக்கு அங்கமாகிய அன்பில்லாதவருக்கு; இடனும், பொருளும், ஏவல் செய்வாரு முதலாயின மற்றைப் புறத்திலே நின்று அங்கமாவன எல்லாம் செய்தவினுலே என்ன உதவியைச் செய்யும்.

இடம், பொருள், ஏவல் முதலாயின அன்பாகிய துணையோடு கூடாதவிடத்து அவைகளால் பயனில்லாமையும் பெறப்பட்டது.

10. அன்பு முதலாக அவ்வறத்தின் பின் நின்ற உடம்பே உயிர்நின்ற உடம்பாகும்; அவ்வன்பில்லாதார்க்குள்ள உடம்புகளானவை எலும்பைத் தோலினுலே போர்க்கப்பட்டனவாம். (உயிர்நின்ற உடம்பு ஆகா.)

இல்லறம் பயன்படாமையால் உயிர்நின்ற உடம்புகளாகா எனப் பெறப்பட்டது.

அடிமை வாழ்வு!

[கொல்லை — த. நாகராசன், B. Sc]

அடிமை வாழ்வு ... ... கதையல்ல. நம்மவரின் துயரக் காதை. "எந்த நாட்டில் மனிதர்களைவிடத் தலைவர்கள் அதிகமாக இருக்கிருர்களோ, எந்த நாட்டில் தலைவர்களைப் பின்பற்றுவோரைவிட அவர்களைப் போற்றுபவர்கள் பெரும்பான்மையோராய் இருக்கிருர்களோ, எந்த நாட்டில் தேசபக்தியை விற்று அதற்குப் பதிலாக தெய்வபக்தியை விலைக்குவாங்குகிருர்களோ, அந்த நாட்டுக்கும் அடிமைத்தனத்துக்கும் வெகு நெருக்கம்" என்ருர் அறிஞர் வெ. சாமிநாத சர்மா அவர்கள்.

"எந்த இனத்தில் படித்த வாலிபர்கள் தானுண்டு தன் வேலையுண்டு என்று தங்கள் வாழ்வை மட்டும் கருதுகிறார்களோ, எந்த இனத்தில் இன உரிமையை விற்று, அதற்குப் பதிலாகத் தெய்வ பக்தியை விலைக்கு வாங்குகிறார்களோ, எந்த இனத்தில் நியாயமான உரிமையைக்கூடப் பெறக் கிளர்ச்சி செய்ய எண்ணமில்லையோ அந்த இனத்துக்கும் அடிமைத்தனத்திற்கும் வெகு நெருக்கம்'' என்கிறேன் நான்.

நம்மின சமுதாயத்துறைகள் அனைத்திலும் அடிமைப்பாசி படிந்திருக்கிறது. நம் மக்களோ சமூதாய நலன்களைக் காட்டிலும் தங்களுடைய நலத்துக்கு முதலிடம் கொடுக்கிறார்கள். மற்றும் சிலரோ வாய்ப்பந்தல் போட்டு அதன் நிழலிலே அயர்ந்து தூங்குகிறார்கள். எதிர்காலக் கதவைத் திறப்பதற்கு நிகழ்கால சாவியைக்கூடத் தேட மறுக்கிறார்கள்.

பரலோக வாழ்வுக்காக நம்முடைய இகலோக வாழ்வை இழக்கலாமா? காணற்கரிய கடவுளை, கண்மூடிக்கொண்டு காண்பதிலே பெரியோர்கள் தங்கள் முயற்சிகளையெல்லாம் செலவழிப்பதைவிட தங்கள் பக்கத்திலேயே நடமாடிக்கொண்டிருக்கும் கண்கண்ட தெய்வங்களைக் கொஞ்சம் கண் திறந்து பார்த்தால் நம் சமூகம் உச்சாணிக் கிளையில் உயர வீற்றிருக்கும்.

சமுதாயம் மற்றைய தொழில் புரிபவரைவிட மீன் பிடிக்கும் தொழிலுடையவரை ஏளனக் கண்களால் பார்க்கிறது; அலட்சிய பார்வையை வீசுகிறது. இது மறுக்கமுடியாத ஓர் உண்மை. ஆனால் மேனாட்டிலே நிலைமை வேறு. யுகோ ஜனாதிபதி **"டிடோ"** (ஜோஷி பிரோஷ்)வுக்கு மீன்பிடிப்பதில் அலாதி ஆசை! ஒரு முறை நிருபர்கள் கேட்டதற்கு "மிகச் சிறந்த மீன்பிடிப்புக்காரர்களில் ஒருவர் ட்ரூமன், மற்றொருவர் நான்தான்'' என்றார்.

"லியோ டால்ஸ்டாய்" ஓர் இரஷ்ய ஞானி. "அவருடைய தாழ்மையான சிஷ்யன் நான்தான்'' என்று போற்றும் காந்தியின் குரு. "லியோ டால்ஸ்டாயின் முன் நான் ஒரு குழந்தை'' என்று **மாக்ஸிம் கார்க்கியே** புகழும் ஒப்பற்ற அறிஞர். அவர் வாரன்கா நதியில் வலைவீசும் தொழிலை மேற்கொண்டார். அவருடைய மனைவி **சோன்யா பெஹர்லும்**, மைத்துனியும் நீரைக் கலக்குவர். அங்கெல்லாம் இவை பெருமையாகப் பேசப்படும். பத்திரிகையில் புகைப் படங்கள் வரும். இத்தகைய நிலை அங்கே!

நம்முடைய நோக்கம் நாம் புகழப்படவேண்டும் என்பதல்ல. நம்மவர் வாழ்க்கை நிலை உயரவேண்டும். மற்றைய சமூகத்தினர் அடையும் நலன்கள் அனைத்தையும் நாம் அடைதல் வேண்டும். இது பேராசை அல்ல; அரசியல் சுதந்திரம். எனவே, நம்முடைய நோக்கம் ஆளவந்தாரின் அதிகார சக்தியினால் அலட்சியாக வீசி பட்டம், பதவி முதலிய துண்டு துணுக்குகளைப் பொறுக்கி எடுத்துக்கொள்வதல்ல. நம்மவர் நல்வாழ்வு பெறுவதுதான்!

ஒரு மனிதனுக்கோ அன்றி ஒரு ஜாதிக்கோ வாழ்வும், தாழ்வும் ஏற்படுவது இயல்பு. இஃது இயற்கையும் கூட. வாழ்கிற

போது அந்த வாழ்வுக்கு எவ்வித இழிவும் பழியும் ஏற்படாம லிருக்க என்னென்ன பாதுகாப்புக்களைச் செய்துகொள்ள வேண்டுமோ அவைகளை எல்லாம் அந்த மனிதனே அல்லது ஜாதியோ செய்துகொள்ளவேண்டும். இதுதான் முறை!

தாழ்வை அணைத்துக்கொண்ட சாதி தாழ்வுற்ற காலத்தில் வாழ்வுக்கு வழிகோல வேண்டும். அவ்விதம் வாழ்வுக்கு வழி தேடும் முன்னர் தாழ்வை உணரவேண்டும். அந்த உணர்ச்சி மட்டும் உள்ளத்தில் உதயமாகிவிட்டால் அந்தச் சாதியின் முன் னேற்றத்தை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. எனவே தான் அறிஞன் வால்டேர் "ஒரு தேசம் சிந்திக்கத் தொடங்கு மானால் அதன் வேகத்தை யாராலும் நிறுத்தமுடியாது" என்றார். அந்தப் பொன்மொழி நம்மின வெழுச்சிக்கும் பொருந்தும். ஆனால், தாழ்வையே வாழ்வாகக் கொண்டு அவற்றிலேயே சிக்கிக் கொண்டு அதனைவிட்டு நகர மறுத்தால் அதில்தான் ஆபத்து உள்ளது.

நம்மவர் சுய நிலையை உணரமுடியாத நிலையில் உள்ளனர். அவர்களது தேவை அவர்களுக்கே தெரியவில்லை. எந்த ஆட்சி யினரும் தாங்களே வலியவந்து மனமொப்பி நம் குறைகளைக் களைய முன்வர மாட்டார்கள். சாதுவான பசுதான்! என்றா லும் தானே வலிய தன்பாலைச் சுரந்து கொட்டுவதில்லையே! எனவே நம் குலத்துக்குத் தேவையான அத்தியாவசிய சலுகைக ளைக் கிளர்ச்சிகள் மூலம்தான் பெறுதல் வேண்டும். இது அரசியல் கருத்துக்கு முரண்பட்டதல்ல!

எந்த மனிதனும் பிறக்கும்போதே அடிமையாய்ப் பிறப்ப தில்லை. சுதந்திரத்தோடுதான் பிறக்கிறான். பின்னர்தான் அநே கம் கட்டுகளுக்கு உட்பட்டு சஞ்சலப்படுகிறான். அதே போலத் தான் ஒரு சாதியும்! எந்தச் சாதியும் ஆதியிலிருந்தே தாழ்வாகக் கருதப்படவில்லை. சூழ்நிலை, சந்தர்ப்ப வசத்தால் தாழ்ச்சி பெறு வதுண்டு. இந்தத் தலைமுறையில் நம் தளையை அறுத்து நாம் தனி உரிமை பெற்ற சாதியாக மிளிர முயற்சிக்காவிட்டால் அடுத்த சந்ததியும் நம்மைப்போலச் செக்கிடை உலவும் மாடுபோல உழல வேண்டியதுதான்.

நம்மவரின் வாழ்வின் விண்முகட்டில் அடிமை முகிற்கூட்டங் கள் திரையிட்டுள்ளது என்பது உண்மை. அடிமை வாழ்வில் உரிமைப் பகலவன் உதிக்கத் தொடங்கினால் ... அச்சம், அயர்வு தாழ்வு ... எல்லாம் ஓட்டம். அந்தநாள் விரைவில் வரத்தான் போகிறது.

ஒவ்வொரு தாழ்ந்த இனமும் அந்த இனத்தில் தோன்றிய சில படித்த இளைஞர்களின் எழுச்சிக் குரலால், உரிமை முரசால் முன்னேறுகிறது. இது நடைமுறையில் நாம் காணும் காட்சி.

படையாச்சி சாதியின் பழைய வரலாறு நமக்கு நல்லதோர் பாடம். அந்தச் சாதி இன்று சீரும் சிறப்புடன் தோன்றுகிறது

அதற்கு என்ன காரணம்? இந்த உதாரணம் பொருமையால் எழுந்தது அல்ல. நாம் உயர அதன் அடிச்சுவடு பயன்படும் என்பதால்தான் அதனை இங்கெழுத்தேன். படித்தவர் ஏராளம் தோன்றினர். "வன்னியர் என்ற பாசறையில் படித்தவர், படியாதவர், பணம் படைத்தோர், ஏழை அனைவரும் அணிவகுத்தனர். திரு. கஜபதி நாயகர் போன்றோரின் அயரா உழைப்பு அந்த இனத்துக்கு அரியாசனம் வாங்கித்தந்தது. இது மகிழ்தற்குரிய நிகழ்ச்சி.

நம்மினத்திலேயும் விரல்விட்டு மடக்கக்கூடிய அளவு பட்டதாரிகள் தோன்ற ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் பிறந்து வளர்ந்த சமுதாயத் தொட்டிலை ஏறிட்டுப் பார்க்கக்கூட கூசுகிறார்கள். இந்த நிலை ஒரு சமூகம் முன்னேற அறிகுறியாக இல்லை.

இந்த நேரத்தில் படித்த இளைஞர்களை வேண்டுவது இது தான்! இன ஒற்றுமைக்காகவாவது நம்மின பட்டதாரிகள் யார் யார் என்னென்ன துறையில் பணியாற்றுகிறார்கள் என்று தெரியவேண்டாமா? 'பர்வத வர்த்தினி' இந்த அறிய தொண்டை அடுத்த இதழிலேயே தொடங்கும் என்று நம்புகிறேன்.

இறுதியாக மாகாண பர்வத ராஜகுல சங்கத்தின் கவனத்துக்கு ஒரு முக்கிய செய்தி. கல்கத்தாவில் மத்திய உள்நாட்டு மீன் இலாக்கா ஆராய்ச்சி நிலையம் ஒன்று உள்ளது. (Central Inland Fisheries Research Station, Calcutta)

அந்த இலாக்காவுக்கு "ஆராய்ச்சி உதவியாளர்கள்" (Research Assistants) என்ற பணிக்கு 13-1-57 "மெயில்" இதழில் விளம்பரம் வந்துள்ளது. அதில் வழக்கம் போல ஷெட்யூல்டு சாதியினருக்கு மட்டும் வயது விலக்கு அளித்துள்ளது. மீன் இலாக்காவில் பணிபுரிய மீனவர் இனத்தில் பிறந்து, மீனவர் இனத்தில் வளர்ந்து படித்துப் பட்டம் பெற்ற B Sc. பட்டதாரிக்கு வயது விதிவிலக்கும், அன்றி மீனவ மாணவர்க்கென்று ஓரிரு ஸ்தானங்களாவது ஒதுக்காததும் வருந்தத்தக்கது. வேண்டிய 14 ஸ்தானங்களில் 2 ஸ்தானங்கள் பர்வத ராஜகுல மாணவர்க்கென்று ஒதுக்கினால் நம்மவர் எவ்வளவோ பயன் பெறலாம்.

இதனை நம் தாய்ச்சங்கம் சம்மந்தப்பட்ட இலாக்காவுக்கு எழுதிப் போராடி வெற்றிபெறும் என்றும் கருதுகிறேன். வெற்றியை நாம் தழுவாவிட்டாலும், நம் சங்கம் இத்தகைய செய்தியைச் சம்பந்தப்பட்ட இலாக்காவுக்கு அறிவித்தாலே போதும். வெற்றி இன்றில்லாவிட்டாலும் நாளை கிட்டும். நம் அடிமை வாழ்வும் அகலும்.

[இதை எழுதியவரின் விருப்பப்படி பட்டம் பெற்ற சமூக மக்கள் எங்கெங்கு என்ன பணியாற்றுகிறார்கள் என்பதைத் தயவுசெய்து தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றனம்.]

ஆசிரியர்.

இன்ப வாழ்க்கை

வீட்டின் இலட்சணம்

தமிழ்ப்புலவர், சிவ. முருகசிவம் அவர்கள்.

முன் இதழ்களில் குறிப்பிட்டபடி வீடு இருக்க வேண்டிய இலட்சணங்களைச் சிறிது ஆராய்வோம். முதலில் வீடு இருக்க வேண்டிய தெரு வடக்குத் தெற்காக இருப்பது உத்தமம், கிழக்கு மேற்கு மத்திமம், மற்ற மூலைகள் அதமம். கிழக்குப் பார்த்த வீடு உத்தமம், தெற்குப்பார்த்த வீடு மத்திமம், மேற்குப் பார்த்த வீடு அதமம், வடக்குப்பார்த்த வீடு அதமா அதமம். இவையெல்லாம் சொந்த வீட்டுக்காரர்களுக்கே உரிமையுடையதாகும். நமது முன்னோர்கள் சாஸ்திர விதிப்படி சரீர அமைப்பையொத்தே வீட்டிற்குத் திண்ணை அமைத்துத் தருமத்தைக் கைப் பற்றி வாழ்ந்து வந்தார்கள்.

தற்காலம் நவீனமாக வீடுகளை அமைக்கவேண்டுமென்றோ, அல்லது அவர்கள் சாஸ்திரக் கருத்து உணராமலோ இல்லங்களின் இலட்சணங்களைச் சீர்குலைக்க முற்பட்டுவிட்டார்கள். அவைகளில் ஒன்று திண்ணை. பானை சாதத்திற்கு ஒன்று பதம் போல ஸ்தாலி பூலா நியாயத்தைக் கொண்டு முதற்கண் திண்ணை ஒன்றை ஆராய்வோம்.

உலகத்தை நொடிப்பொழுதில் முற்றத்துறந்த பட்டினத்தார் எவை நேரினும் இவைகளுக்குப் பஞ்சமில்லை எனத் தமதருள் வாக்கில் "உடைகோவண முண்டு, உறங்கப் புறந்திண்ணை யுண்டு" என்று கூறின நோக்கத்திற்கும், குமர குருபர சுவாமிகள் தில்லையில் ஆநந்தத் தாண்டவம் செய்யும் நடராஜப் பிரபுவை நோக்கி "கடைப்புறந் திண்ணை யல்லது கிடைக்கைக்கு இடம் பிறிதில்லையாக" எனத் தமதருள் வாக்கில் வேண்டுகோளை அறிவித்தார். இத்தகைய பல பெரியோர்களின் வாக்கியத்திற்கு இன்னும் சில நாளுக்குள் பொருளற்றுவிடும் போலிருக்கின்றன.

தான் வாழ விரும்பும் மனையை முப்பத்திரண்டு பாகத்தில் மூன்று பாகத்திற்குக் குறையாமல் முற்பாகத்தில் விட்டு, சந்நியாசி, துறவி, அதிதி, ஏழைகள் மற்றும் உள்ளவர்கள் தங்குவதற்குத் திண்ணை முதலியனவும், பிற்பாகம் அவ்வாறே தனது சௌகரியத்திற்காக விட்டு இடையில் வீடு அமைத்து வாழ வேண்டுமென்று இருப்பதை இப்போது பார்த்தால் பிற்பாகத்தையெடுத்துக்கொண்டது மல்லாமல் முன்பாகத்திற்கும் அச்சாரம் கொடுத்து விட்டார்கள். என்னை? நமது முன்னோர்கள் தரும நெறியில் கட்டிய வீடுகளிலிருக்கும் திண்ணைகளை வீடுகளாக்கிக் குடிக்கூலிக்கு விடுகிறார்கள். சிலர் அவ்வாறு செய்யின் அழகாக இல்லை என்று ஒட்டுத்திண்ணை வைக்கிறார்கள். சிலர் யாரும் வராதபடி இரும்புக்கம்பியிட்ட கதவு போடுகிறார்கள். இம்மட்டோடிருந்தால் போதாதென்று ஒரு நாயையும் கட்டி வைக்கிறார்கள்.

தொடரும்.

187249

சட்டசபை எலெக்ஷன்

அன்பர் திரு. O. இருசப்பன் அவர்கள் எம். எல். ஏ. வாக கும்பகோணம் தொகுதியில் நிற்கிறார் என்பது யாவரும் அறிந்திருப்பீர்கள். சமூக ஆர்வமும் பொது நல சேவையும் நிறைந்தவர். மிகவும் ஏழை. சமூக மக்களின் சிறந்த ஆதரவைக் கொண்டு தாம் வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கை அவருக்கு மிகுதியும் உண்டு. கும்பகோணம் தொகுதியிலுள்ள நம் இன மக்கள் பலர் வெளியூர்களிலும் தற்காலிகமாகச் சென்றிருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் தனித்தனியாக விஷயங்களைத் தெரியப்படுத்தி வரவழிப்பதென்பது மிகவும் சிரமம் என்பதை யாவரும் அறிவர். அத்தகைய அன்பர்கள் தங்கள் சமூகத்தின் நலனைக் கருதி நேரில் கும்பகோணம் வந்து சமூக அன்பராகிய இவருக்கு ஓட்டுக் கொடுத்து ஆதரிக்கவேண்டியது மிகவும் முக்கியம் என்பதை ஞாபகமூட்டுகின்றனம். மேலும், கும்பகோணத்திலுள்ள அன்பர்கள் யாவரும் தங்களுக்குப் பிறஇனத்தவர்களிடமுள்ள செல்வாக்கை இங்குப் பயன்படுத்தி நம் சமூக அன்பர் வெற்றிபெறச் செய்யவேண்டியது மிகவும் முக்கியம்.

இந்தச் சமயத்தில் கட்சிப் பாகுபாட்டையோ அல்லது உயர்வு தாழ்வு வித்தியாசமோ நம்மில் இருக்காமல் சமூக அன்பர் வெற்றி பெறவேண்டும் என்ற ஒன்றையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு எவ்வித எதிர்ப்பிருந்தாலும் அவைகளையெல்லாம் அசட்டை செய்து வெற்றி காண்பதில் முனையவேண்டும். கும்பகோணத்திலுள்ள நமது அன்பர்கள் தேர்தல் வேலையில் ஈடுபடுவது சர்வ சாதாரணமாகிவிட்ட விஷயம். அவர்கள் மனது வைத்தால் மடுவையும் மலையாக்கிவிடுவார்கள். எல்லாத் துறைகளிலும் வல்ல பல வாலிபர்கள் அங்கு உள்ளார்கள் என்பதை யாவரும் அறிவர். பொருளுதவி செய்வதிலோ பின்வாங்க மாட்டார்கள். பெரியவர்கள் முதல் குழந்தைகள் ஈறாக இனப்பற்றுக் கொண்டவர்கள். இத்தகைய இயல்புவாய்ந்த மக்கள் தங்கள் சமூகத்தில் நிற்கும் திரு. இருசப்பன் அவர்களை ஆதரிப்பர் என்பதில் ஐயமில்லை. இருப்பினும், இச்சமயத்தில் அவர்கள் யாவரையும் நினைவுபடுத்தும் முறையில் சில எழுதவேண்டியிருப்பதாக அவர்கள் கோபப்படாமல் தகுதியோ திறமையோ பாராமல் தங்கள் இனம் என்ற ஒன்றைமட்டும் மனத்துட்கொண்டு தங்கள் செல்வாக்கையும், பொருளையும் ஊக்கத்தையும் தாராளமாக உதவி வெற்றியடையச் செய்யவேண்டும் என்று கும்பகோணத்திலுள்ள நமது சமூக மக்கள் யாவரையும் மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகின்றனம்.

ஆசிரியர்.



BUY ALWAYS

OUR
BEST
QUALITY

FINE & DELICIOUS
TO DRINK

COFFEE

RAW, ROAST & GROUND

OUR SCENTED NUTS—A SPECIALITY

Sawmy's Coffee Mfg., Co.,

262, NETAJI SUBHAS CHANDRA BOSE ROAD, MADRAS-1.
PHONE No. 3687.

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ்

777 மார்க்

ரெடி மிக்சர் ரவா தோசை பவுடர்

உபயோகிக்கும் முறை

$\frac{1}{8}$ படி தண்ணீரில் $\frac{1}{8}$ படி 777 ரவா தோசை
மிக்சர் பவுடரைக் கலந்து தோசை
செய்யவும்

உப்பு, காரம் எதுவும் சேர்க்கத்தேவையில்லை

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ் & கோ.

ஸ்ரீ ராமபவான் பில்டிங்ஸ்,

46, தம்பு செட்டி தெரு :: மதராஸ்.

Editor, Printer, Publisher: Sri V. M. Natesam, Goodland & Co.,
55, Muthumari Chetty Street, Madras-1.